# திருக்குர்ஆனின் சிறப்புகள்

## (ஃபஸாயிலுல் குர்ஆன்)

## எண்: 1

காதியான் ஆண்டு மாநாட்டில் 28 டிசம்பர் 1928-ல் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு

வெளியிடுவோர்
மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ்
சென்னை

# திருக்குர்ஆனின் சிறப்புகள்

**(ஃபஸாயிலுல் குர்ஆன்)**
**எண்:1**

காதியான் ஆண்டு மாநாட்டில் 28 டிசம்பர் 1928-ல் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு

**வெளியிடுவோர்**
மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ்
சென்னை

# Tamil Translation of the Book
# Fazailul Qur'an No: 1
# திருக்குர்ஆனின் சிறப்புகள் எண் 1


| | | |
|---|---|---|
| Author | : | Hadhrat Mirza Bashiruddin Mahmud Ahmad[ra] Khalifatul Masih II |
| Translator | : | Maulavi O.M.Muzzammil Ahmad H.A |
| Composed by | : | Maulavi O.M.Muzzammil Ahmad H.A |
| Book Set by | : | Maulavi R.Mahmood Ahmad Abdullah |
| First Edition | : | 2023 |
| Copies | : | 500 |
| Publisher | : | Majlis Ansarullah Chennai, Tamil Nadu |
| Printed at | : | Fazl-e-Umar Printing Press Qadian |

National Toll free No: 1800-103-2131

Tamil Toll free No: 1800-425-40000

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ

# முன்னுரை

அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப அல் முஸ்லிஹுல் மவ்வூது ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்களின் அருளுக்குரிய தோற்றத்தில் முஸ்லிஹ் மவ்வூது பற்றிய முன்னறிவிப்பின் ஒவ்வொரு பகுதியையும் மிகவும் மகத்தான முறையில் நிறைவேற்றினான். மேலும் அன்னாருடைய வருகையின் குறிக்கோள்களில் ஒன்றாக, இஸ்லாம் மார்க்கத்தின் சிறப்பும், அல்லாஹ்வுடைய சொல்லின் அந்தஸ்தும் மக்களுக்கு வெளிப்பட வேண்டும் என்பதையும் குறிப்பிட்டிருக்கிறான்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் முழு வாழ்க்கையும் இந்தக் குறிக்கோளை நிறைவு செய்தவாறு அல்லாஹ்வின் சொல்லுக்கு, அதாவது, திருக்குர்ஆனுக்குத் தொண்டு செய்வதில் கழிந்தது. அவர்கள் திருக்குர்ஆனுக்குத் தன்னலமற்ற தொண்டு செய்துள்ளார்கள். "தஃப்ஸீரே ஸகீர்" எனப்படும், சுருக்கமான விளக்கவுரையுடன் கூடிய திருக்குர்ஆன் மொழியாக்கம், "தஃப்ஸீரே கபீர்" எனப்படும் திருக்குர்ஆனின் தேர்ந்தெடுக்கப்பட்ட சூராக்களின் ஞானங்கள் நிறைந்த விளக்கவுரை, **'ஃபளாயிலுல் குர்ஆன்'** மற்றும் அவர்களின் எண்ணற்ற சொற்பொழிவுகள் இதற்குத் தெளிவான சான்றுகளாகும்.

சய்யிதுனா இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் **'ஃபளாயிலுல் குர்ஆன்'** என்ற தலைப்பில் ஆறு மகத்தான சொற்பொழிவுகளின் தொகுப்பு நஸாரத் நஷ்ரோ இஷாஅத் சார்பாக வெளியாகி விட்டது. அவர்கள் திருக்குர்ஆனின் உண்மைகள், ஞானங்கள் மற்றும் அதன் மறைவான இரகசியங்களுடன் தொடர்புடைய ஞானங்களின் கருவூலங்களைக் கொண்ட கருத்துகளை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்த சொற்பொழிவுகளில் திருக்குர்ஆனின் மகத்துவம், உயர்ந்த அந்தஸ்து மற்றும் அதன் பொருள்கள்,

விளக்கவுரைகள் ஆகியவற்றின் ஒரு புதிய முறை தென்படுகிறது. அவர்கள் தஃப்ஸீருல் குர்ஆன் பற்றி எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் கோட்பாட்டை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள் என்றால், அவை மிக அறிதானவையாகும்.

இந்திய மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ்வின் 2021-ஆம் ஆண்டிற்கான மஜ்லிஸே ஷூராவில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்ட ஓர் ஆலோசனைக்கேற்ப, இந்திய மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் **'ஃபளாயிலுல் குர்ஆன்'** என்பதில் அடங்கியுள்ள சொற்பொழிவுகளிலிருந்து ஒரு சொற்பொழிவை முதலில் உருதுவில் வெளியிடும் நற்பேற்றைப் பெறுகிறது. இதற்குப் பிறகு மாநில மொழிகளிலும் இதன் மொழியாக்கங்கள் வெளியிடுவது நோக்கமாகும் - இன்ஷா அல்லாஹ். (இதன்படியே தமிழ் மொழியிலும் இந்த நூல் மொழியாக்கம் செய்யப்பட்டு மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் சென்னை சார்பாக வெளியிடப்படுகிறது.)

அல்லாஹ் இந்த சிறு நூலின் வெளியீட்டை எல்லா வகையிலும் அருளுக்குரியதாக ஆக்குவானாக. ஆமீன்.

வஸ்ஸலாம்<br>
எளியவன்<br>
**அத்தாவுல் முஜீப் லோன்**<br>
சத்ர் மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் இந்தியா<br>
காதியான்

# பதிப்புரை

சய்யிதுனா இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் தொகுப்பாகிய ஃபஸாயிலுல் குர்ஆன் "திருக்குர்ஆனின் சிறப்புகள் எண்: 1" என்ற நூலை மதிப்பிற்குரிய மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மது H.A அவர்கள் தமிழாக்கம் செய்து தந்துள்ளார்கள்.

இதை சரிபார்ப்புக் குழு உறுப்பினர்களான மவ்லவி அத்தாவுல் முஃக்னீ அவர்களும் மவ்லவி A.P.A. தாரிக் அஹ்மது அவர்களும் மூல நூலுடன் சரி பார்த்து திருத்தங்களை செய்துள்ளார்கள். அவ்வாறே, தமிழ் ரிவ்யூ கமிட்டி தலைவர் J.S. சலீம் அஹ்மது சாஹிப் அவர்களும் இந்த நூலின் தமிழாக்கத்தை முழுமைப்படுத்துவதில் ஒத்துழைப்பு வழங்கியிருக்கிறார்கள்.

அவர்கள் அனைவருக்கும் அல்லாஹ் மேலான வெகுமதியை வழங்குவானாக! ஆமீன்

வஸ்ஸலாம்
எளியவன்
**அத்தாவுல் முஜீப் லோன்**
சத்ர் மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் இந்தியா
காதியான்

## பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | திருக்குர்ஆனுக்கு சென்ற கால இல்ஹாமிய வேதங்களின் மீது இருக்கும் சிறப்பும், ஐரோப்பிய கிழக்கத்தியவர்களின் ஆட்சேபனைகளுக்கான மறுப்பும் | 1 |
| 2. | திருக்குர்ஆனின் கருத்துக்களைப் பற்றி சிந்திப்பதற்கு அடிப்படையான சில விஷயங்கள் ........................ | 2 |
| 3. | திருக்குர்ஆனின் தேவை .................................. | 3 |
| 4. | திருக்குர்ஆனின் வஹீ எவ்வாறு இறங்கியது? .... | 5 |
| 5. | திருக்குர்ஆனின் தொகுப்பு பற்றிய விவாதம் ........ | 6 |
| 6. | திருக்குர்ஆனின் பாதுகாப்பு தொடர்பான விவகாரம் | 7 |
| 7. | முந்தைய வேதங்களுடன் திருக்குர்ஆனுக்கு உள்ள தொடர்பு ................................................ | 7 |
| 8. | முந்தைய வேதங்கள் திருக்குர்ஆனை உண்மைப்படுத்துதல் .................................. | 8 |
| 9. | முந்தைய வேதங்களை விடத் திருக்குர்ஆனில் இருக்கும் அதிகமான சிறப்புகள் ............................ | 9 |
| 10. | திருக்குர்ஆனின் சீரமைப்பு ................................ | 9 |
| 11. | ரத்து செய்கின்ற, ரத்து செய்யப்பட்ட வசனங்கள் பற்றிய விவாதம் .............................................. | 10 |
| 12. | திருக்குர்ஆன் இறங்கியதன் நோக்கமும் அது நிறைவேறுவதும் ............................................. | 11 |
| 13. | மனித இயல்புக்கேற்ற போதனை ....................... | 11 |

14. திருக்குர்ஆனைப் புரிவதற்கான அடிப்படைக் கொள்கை ........................................................ 12
15. திருக்குர்ஆன் முந்தைய வேதங்களை உண்மைப்படுத்தக் கூடியது என்பது எந்தப் பொருளில் கூறப்பட்டுள்ளது? ............................... 12
16. பழைய சம்பவங்களை எடுத்துக் கூறியதன் நோக்கம் 13
17. ஆணையிடுவதன் உண்மைத்துவம் ................... 13
18. முஃஜிஸாத் (அற்புதங்கள்) பற்றிய விவாதம் ....... 14
19. இறைவனின் சொல்லிலும், செயலிலும் எந்த முரண்பாடும் இல்லை ..................................... 14
20. திருக்குர்ஆனின் ஆன்மிக மேன்மைகள் ............. 15
21. இறுதியான ஷரீஅத்தைக் கொண்ட இறைகூற்று...... 15
22. அரபி மொழியை மேற்கொண்டதற்குக் காரணம் 15
23. முந்தைய போதனைகளின் குறைபாடுகளுக்கான அடிப்படையான மறுப்பும், சரியான கொள்கைகளை எடுத்துக் கூறுவதும் ................................................. 15
24. திருக்குர்ஆனின் உண்மைக்குச் சான்று ............... 16
25. திருக்குர்ஆனின் தாக்கங்கள் ............................. 16
26. முதஷாபிஹாத் (ஒப்புமையுள்ள வசனங்கள்)-க்கான தீர்வு ......................................................................... 16
27. சுருக்கெழுத்துகளுக்கான தீர்வு ......................... 17
28. ஏழு கிரஅத்துகள் என்பதன் கருத்து என்ன? ....... 17
29. திருக்குர்ஆன் உருவானது பற்றிய விவகாரம் ..... 17
30. திருக்குர்ஆன் ஓர் உயிருள்ள வேதம் ஆகும் ..... 17

31. திருக்குர்ஆன் என்னென்ன ஞானங்களைப் பற்றி எடுத்துக் கூறுகிறது? ........................................ 18

32. திருக்குர்ஆன் பல ஞானங்களைக் கொண்டுள்ளது 18

33. திருக்குர்ஆன் முழுமையான வேதம் ஆகும் ........ 18

34. திருக்குர்ஆனின் கருத்துச் செறிவு ...................... 19

35. திருக்குர்ஆனை மற்ற இல்ஹாமிய வேதங்களுடன் ஒப்பாய்வு செய்தல் ............................................ 19

36. ஒரு நிகரற்ற ஆன்மிக, பௌதிக, நாகரிக, அரசியல் சட்டம் .......................................................... 19

37. திருக்குர்ஆனின் உவமைகள் .......................... 19

38. திருக்குர்ஆனின் மொழியாக்கங்களின் தேவை 19

39. திருக்குர்ஆனைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகள் 19

40. திருக்குர்ஆனைக் கவிதை எனக் கூறக் காரணம் .... 20

41. திருக்குர்ஆன் படிப்படியாக ஏன் இறங்கியது? ....... 20

42. திருக்குர்ஆனின் எந்த ஒரு மொழியாக்கமும் அதன் எல்லாக் கருத்துக்களையும் உள்ளடக்கியதாக இருக்க முடியாது ............................................ 20

43. திருக்குர்ஆனின் எல்லா சொற்களும் இல்ஹாமிய (சொற்கள்) ஆகும் ........................................... 20

44. திருக்குர்ஆன் எல்லா வகையான ஷைத்தானிய கூற்றிலிருந்தும் தூய்மையானதாகும் ................. 22

45. திருக்குர்ஆன் விளித்துக் கூறியிருக்கும் மக்கள் யார்? 22

46. திருக்குர்ஆனின் மொழியாக்கம் சொல் அளவில் இருக்க வேண்டுமா? அல்லது மொழிவழக்கின்படி இருக்க வேண்டுமா? ....................................... 22

47. திருக்குர்ஆன் மீது ஐரோப்பாவைச் சார்ந்த கிழக்கத்தியவர்களின் தாக்குதல் .......................... 23

48. கிறித்தவர்களின் பொய்யான தந்திரங்கள் 25

49. சின்னச் சின்ன துண்டுகளான வடிவத்தில் திருக்குர்ஆன் இறங்குதல் .................................. 29

50. திருக்குர்ஆனைத் தொகுத்தது பற்றிய ஆட்சேபனைகள் 36

51. எதிரிகளின் ஆட்சேபனைகளுக்கான பதில்கள் ...... 38

52. முஹ்கமாத், முதஷாபிஹாத் .............................. 47

53. முழுக் குர்ஆனும் முஹ்கம் என்றும், முழுக் குர்ஆனும் முதஷாபிஹ் என்றும் ஏன் கூறப்பட்டுள்ளது? .................................................. 52

اَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَ عَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

இறைவனின் அருளாலும் கருணையாலும்

அவன் உதவி செய்பவன் ஆவான்

# திருக்குர்ஆனின் சிறப்புகள் - எண்:1

## திருக்குர்ஆனுக்கு சென்ற கால இல்ஹாமிய வேதங்களின் மீது இருக்கும் சிறப்பும், ஐரோப்பிய கிழக்கத்தியவர்களின் ஆட்சேபனைகளுக்கான மறுப்பும்

### காதியான் ஆண்டு மாநாட்டில் 28, டிசம்பர் 1928 அன்று ஆற்றிய சொற்பொழிவு

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தஷஹ்ஹுது, தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு கூறினார்கள்:

அல்லாஹ்வின் இயற்கைச் சட்டம் பற்றி ஏதாவது வரம்பு விதிப்பது அல்லது வரம்பு விதிக்க விரும்புவது மனிதனின் ஆற்றலுக்கு அப்பாற்பட்டதும் மரியாதைக்கு எதிரானதும் ஆகும். ஆனால் இன்று ஜுமுஆ தொழுகையின் நேரத்திற்கு அருகில் மேகம் ஒன்று கூடி வந்தபோதும், மழை வேகமாகப் பொழிய ஆரம்பித்தபோதும் பலவீனம் மற்றும் உடல் நிலை மோசமாக இருந்தாலும் குறைந்த பட்சம், மாநாடு அனைத்து சகோதரர்களுடனும் சேர்ந்து துஆவுடன் நிறைவடைய வேண்டும் என்றே எனது இயல்பு விரும்பியது. அல்லாஹ்வின் ஆற்றல்கள் மிகவும் விசாலமானவையாகத்தான் இருக்கின்றன; ஆனால் அடியான் பதற்றமடைந்து விடுகிறான். மேலும் மழை பொழிவது நின்று விடாதபோது, நான் எழுத்து மூலமாக

ஒன்றை எழுதி நண்பர்களிடம், இதை நகல் எடுத்து இப்போதே அறைகளில் இருப்பவர்களுக்கு எட்ட வைத்து விடுங்கள் என்று கூறினேன். (எழுதியிருந்த) அதன் கருத்து, மழையின் காரணமாக நாம் அனைவரும் ஓரிடத்தில் ஒன்று கூட முடியாது; எனவே நான் மாலை 5:15 மணிக்கு துஆ செய்வேன். எல்லா நண்பர்களும் தத்தமது இடங்களில் இருந்தவாறு இந்த துஆவில் கலந்து கொள்ளுங்கள் என்பதாகும். ஆனால் அல்லாஹ் எத்தகைய அருள் புரிந்தான் என்றால், நகல்கள் எடுத்துக் கொண்டிருக்கும்போதே, 'மழை நின்று விட்டது. அல்லாஹ் வேறொரு நிலையை உருவாக்கி விட்டான்; இப்போது நகல்களை எடுக்க வேண்டிய தேவையில்லை' என்று கூறி அனுப்பினேன்.

## திருக்குர்ஆனின் கருத்துக்களைப் பற்றி சிந்திப்பதற்கு அடிப்படையான சில விஷயங்கள்

நான் இந்த மாநாட்டிற்காக தேர்ந்தெடுத்திருந்த கருத்தை முழுமையாக எடுத்துக் கூற என்னால் இயலாது என்பது எனக்கு மிகவும் வருத்தமாகும். அதன் காரணம் என்னவெனில், அந்தக் கருத்து குறைவிலும் குறைவான நேரத்தை எடுத்தாலும் அதை சுருக்கமாக எடுத்துக் கூறினாலும் அது 5, 6 மணி நேரத்தில் எடுத்துக் கூறலாம். மேலும் சூழ்நிலை மோசமாக இருப்பதன் காரணத்தாலும், உடல் நலம் பலவீனமாக இருப்பதன் காரணத்தாலும் இவ்வளவு நீண்ட சொற்பொழிவு என்பது இந்த நேரத்தில் முடியாது. ஆண்டு மாநாட்டிற்காக நான் இந்த தலைப்பை தேர்ந்தெடுத்ததற்குக் காரணம், இந்தக் கருத்து திருக்குர்ஆனைப் பற்றியதாகும். மேலும் அல்லாஹ்வின் அருள் உடனிருந்தால் இனிமேல் நம் சார்பாக திருக்குர்ஆனின் மொழியாக்கம் வெளியிடும்போது இதை

அதன் முன்னுரையாக ஆக்கி விடலாம் என்பதும், அந்தக் கருத்துகளின் சில பகுதிகளை மாநாட்டின்போது எடுத்துக் கூறி விடலாம் என்பதும், இன்னும் எஞ்சிய பகுதிகளை நானே எழுதி விடுவேன் என்பதும் எனது எண்ணமாகும்.

ஆனால் இந்த நேரத்தில் இந்தக் கருத்தை விளக்கமாக எடுத்துக் கூற இயலாது. எனவே இன்று நான் சுருக்கமாக, திருக்குர்ஆன் பற்றி சிந்திப்பதற்கும், அதை உலகத்திற்கு முன்னால் எடுத்து வைப்பதற்கும் என்னென்ன கருத்துகளைப் பற்றி சிந்திக்க வேண்டும் என்பதை பற்றி மட்டுமே எடுத்துக் கூறுகின்றேன். கிறித்தவர்களும், முஸ்லிம் அல்லாத மற்றவர்களும் இஸ்லாத்திற்கு எதிராக எவ்வளவு முயற்சி செய்து கொண்டிருக்கின்றனர்? முஸ்லிம்கள் இதன் பக்கம் எவ்வளவு கவனமற்றவர்களாகவும், பொருட்படுத்தாதவர்களாகவும் இருக்கின்றனர்? என்பதைப் பற்றியும் எடுத்துக் கூறுவேன். என்னைப் பொருத்தவரை, திருக்குர்ஆனை ஒட்டுமொத்தமாகப் பார்ப்பதற்கு கீழ்வரும் விஷயங்களின் மீது சிந்திப்பது அவசியமாகும்:

## திருக்குர்ஆனின் தேவை

1. முதலாவது, திருக்குர்ஆன் இறங்கிய அந்த காலத்தில் உலகிற்கு ஏதாவது இல்ஹாமிய வேதத்தின் தேவை இருந்ததா? இல்லையா? ஏனெனில் ஒரு பொருள் தகுந்த சந்தர்ப்பத்தில் இறங்கியது என்று நிரூபணமாகாத வரை அதை அல்லாஹ்வுடன் தொடர்புபடுத்திக் கூறப்பட முடியாது. திருக்குர்ஆன் இறங்கியபோது அந்த நேரத்தில் மக்களின் நிலைமை மோசமாக இருந்தது எனப் பலர் கூறுகின்றனர். ஆனால் மக்களின் நிலைமை மோசமானதன் காரணமாக இறைவனிடமிருந்து ஒரு வேதமும் இறங்க வேண்டும்

என்பது அவசியமாக இருப்பதில்லை. பாருங்கள். மக்களின் செயல் அளவிலான நிலைமை முற்றிலும் மோசமடைந்து விட்ட காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வருகை தந்தார்கள். ஆனால் அவர்கள் ஏதாவது வேதத்தைக் கொண்டு வந்தார்களா? எனவே மக்களின் பழக்கங்கள் மோசமாகி விட்டிருந்தன. வரம்புமீறுதலும், தீமைகளும் உருவாகி விட்டிருந்தன என்பதால், அந்த காலத்தில் திருக்குர்ஆனின் தேவையும் இருந்தது என்பதற்கு இது போதுமான சான்று அல்ல. அல்லது அரபிகளிடம் தீய சம்பிரதாயங்கள் உருவாகி விட்டிருந்தன. மகள்களைக் கொன்று வந்தனர். மாற்றாந் தாயை (அதாவது தன் தந்தையின் இன்னொரு மனைவியை) திருமணம் செய்து வந்தனர். இதிலிருந்து அரபிகளுக்கு ஒரு வேதம் தேவையாக இருந்தது என்பது வேண்டுமானால் அதிகபட்சமாக நிரூபணமாகலாம்; முழு உலகிற்கும் (வேதத்தின்) தேவை இருந்தது என்பது நிரூபணமாகாது.

உதாரணமாக, ஹஸ்ரத் மூஸா (அலை) மற்றும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் காலத்தில் இஸ்ராயீல் மக்களின் நிலைமை கடும் மோசமாக இருந்தது. ஆனால் அதற்காக ஹஸ்ரத் மூஸா அல்லது ஹஸ்ரத் ஈஸா (அலைஹிஸ் ஸலாம்) ஆகியோர் முழு உலகத்திற்காகவும் வந்தனர் என்பது அதற்குப் பொருள் அல்ல. நாம் நிரூபிக்க வேண்டியது என்னவெனில், அந்தக் காலத்தில் எல்லா மார்க்க வேதங்களிலும் எப்படிப்பட்ட சீர்குலைவு உருவாகிவிட்டதென்றால், அவை தன்னளவில் உலகத்திற்கு ஆறுதல் அளிப்பதற்கு போதுமானவையாக இருக்கவில்லை. எனவே திருக்குர்ஆன் இறங்குவதற்கான தேவையை நிரூபிப்பதற்கு, முந்தைய வேதங்களில் சீர்குலைவு ஏற்பட்டதை நிரூபிக்க வேண்டியது அவசியமாகும்.

## திருக்குர்ஆனின் வஹீ எவ்வாறு இறங்கியது?

2. இரண்டாவது, திருக்குர்ஆனின் வஹீ எவ்வாறு இறங்கியது என்பதைப் பற்றி விளக்குவது அவசியமாகும். ஏனெனில் ஒரு வஹீ இறங்குவதன் வழிமுறையிலிருந்தும் அதன் உண்மைத்துவத்திற்கான பல விஷயங்களை அறிய முடியும். உதாரணமாக, இந்த விஷயத்தைப் பற்றி விவாதிக்கும்போது, எந்த மனிதரின் மீது அந்த வஹீ இறங்கியதோ, அது இறங்கும் காலத்தின் நிலைமையைப் பொருத்த அளவில் அவருடைய மூளை கெட்டுப் போயிருந்தது - நவூதுபில்லாஹ் - என்று வெளிப்படுவதில்லையே என்ற கேள்வி முன்னால் வந்து விடும். எங்களுக்கு இன்னின்ன இல்ஹாம் வந்தது என்று கூறுபவர்கள் பலர் இருக்கின்றனர். அவர்கள் தம் சார்பாக எந்தப் பொய்யையும் கூறுவதில்லை. ஆனால் அவர்களின் மூளை கெட்டுப் போய் இருக்கும்.

ஒருமுறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் ஒருவர் வந்து எனக்கும் இல்ஹாம் வருகிறது என்று கூறினார். அன்னார் (அலை), அவருடைய அந்தப் பேச்சைக் கேட்டு மவுனமாக இருந்தார்கள். அவர் மீண்டும் கூறினார்: நான் சஜ்தா செய்யும்போது, 'நீர் அர்ஷ் மீது சஜ்தா செய்வீராக' என்று இறைவன் என்னிடம் கூறினான். மேலும் நீர் முஹம்மது ஆவீர்; நீர் ஈஸா ஆவீர்; நீர் மூஸா ஆவீர் என்று இறைவன் கூறினான் என்றார். இதைக் கேட்ட ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அவரிடம், உம்மை முஹம்மது என்று கூறப்படும்போது முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஜமால் (அழகு), ஜலால் (கம்பீரம்) உமக்கு வழங்கப்படுகிறதா? அல்லது திருக்குர்ஆனின் ஞானங்களும் உமக்குத் திறக்கப்படுகின்றனவா என்று கேட்டார்கள். அதற்கு

அவர், இல்லை என்று கூறினார். அப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அவரிடம், பிறகு உம்மை இறைவன் அர்ஷுக்கு கொண்டு செல்வதில்லை; மாறாக, ஷைத்தான் வழிகெடுக்கிறான் என்று கூறினார்கள். உம்மை இறைவன் அர்ஷ் வரை கொண்டு செல்கின்றான் என்றால், முஹம்மது என்று கூறுகிறான் என்றால், உமக்கு முஹம்மது (ஸல்) அவர்களின் ஆற்றல்களையும் பெருமானார் (ஸல்) அவர்களின் அடிமைத்துவத்தில் உமக்கு அவன் வழங்கியிருப்பான் என்று கூறினார்கள்.

ஆக, திருக்குர்ஆனின் வஹீ இறங்குவது பற்றி விவாதிக்கும்போது எந்த மனிதர் மீது இந்தக் கூற்று இறங்கியதோ அவர் பைத்தியமாகவோ, அல்லது அவருடைய மூளையில் ஏதாவது குறைபாடோ இல்லையே என்ற கேள்வியும் முன்னால் வந்து விடும்.

## திருக்குர்ஆனின் தொகுப்பு பற்றிய விவாதம்

3. திருக்குர்ஆனைப் பார்க்கும்போது முன்னால் வருகின்ற மூன்றாவது கேள்வி, திருக்குர்ஆன் எவ்வாறு தொகுக்கப்பட்டது என்பதாகும். உலகத்திற்கு முன்னால் என்ன வேதம் வைக்கப்பட்டுள்ளதோ அதை இறக்கக் கூடியவனின் குறிக்கோளுக்கு ஏற்ப அந்த நிலையிலேயே வந்திருக்கிறதா என்ற கேள்வி இயற்கையாக உருவாகிறது. அந்த நிலையிலேயே முன்னால் வந்திருக்கிறதென்றால், அது பற்றி சிந்திப்பதால் எடுத்து வைப்பவனின் அந்த சரியான நோக்கம் தெரிந்து விடும். ஆனால் அதில் ஏதாவது மோசமோ குறைபாடோ உருவாகி விட்டால், பின்னர் அந்த வேதத்தை எடுத்து வைப்பவனின் நோக்கம் வீணாகி விட்டது. அதன் காரணமாக அதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டிய தேவையே இருக்காது.

திருக்குர்ஆன் சரியான முறையில் தொகுக்கப்படவில்லை என்று நிரூபிக்க ஐரோப்பிய மக்கள் மிகவும் முயற்சி செய்திருக்கின்றனர். திருக்குர்ஆனின் சொற்றொடர்களில் எந்த சீரமைப்பும் இல்லை; பல்வேறு விஷயங்கள் அப்படியே ஒன்று சேர்க்கப்பட்டு விட்டன என்று அவர்கள் கூறுகின்றனர்.

## திருக்குர்ஆனின் பாதுகாப்பு தொடர்பான விவகாரம்

4. நான்காவதாக, திருக்குர்ஆன் இப்போதுவரை பாதுகாக்கப்பட்டதாகவும் இருக்கிறது என்பதை நிரூபிக்க வேண்டியது வரும். திருக்குர்ஆன் எடுத்து வைப்பவனின் விருப்பத்திற்கேற்ப சரியான முறையில் தொகுக்கப்பட்டுள்ளது என்று நாம் நிரூபித்து விட்டாலும், அதில் கொஞ்சம் அதிமான பகுதிகளும் இணைந்து விட்டன; அல்லது அதிலிருந்து சில பகுதிகள் நீங்கி விட்டன என்று கூறப்பட்டால், பின்னர் வேதம் அசல் நிலையில் இல்லை; அதன் காரணமாக அது எவர்களுக்காக வந்ததோ, அந்த பலனை அது தர முடியாது. மேலும் அது உலகிற்கு முழுமையான நேர்வழியாக இருக்க முடியுமா என்ற கேள்வி எழும்.

இதற்காகவும் கிறித்தவ வரலாற்று ஆசிரியர்கள் மிகவும் அழுத்தம் கொடுத்திருக்கின்றனர். மேலும் திருக்குர்ஆன் பாதுகாக்கப்பட்டதாக இல்லை என்று நிரூபிக்க முயற்சி செய்திருக்கின்றனர்.

## முந்தைய வேதங்களுடன் திருக்குர்ஆனுக்கு உள்ள தொடர்பு

5. சிந்திக்க அவசியமாக இருக்கும் ஐந்தாவது கேள்வி, திருக்குர்ஆனுக்கு முந்தைய வேதங்களுடன் என்ன தொடர்பு இருக்கிறது என்பதாகும். திருக்குர்ஆன் முந்தைய வேதங்களை உண்மைப்படுத்துகிறதா? இல்லையா? உண்மைப்படுத்துகிறது

என்றால், எவ்வாறு? அவற்றை தற்போதைய நிலையில் சரியானதாக ஒப்புக்கொள்கின்றதா? அல்லது முதலில் சரியாக இறங்கியிருந்தன; ஆனால் இப்போது சீர்குலைந்து விட்டன என்று கூறுகிறதா? திருக்குர்ஆன் முந்தைய வேதங்களை அவற்றின் தற்போதைய நிலையில் சரியானவை என்று ஒப்புக் கொண்டிருக்கின்றது என்று நிரூபிக்க ஐரோப்பிய மக்கள் பெரும் முயற்சி செய்துள்ளனர். இதிலிருந்து அவர்களின் நோக்கம், திருக்குர்ஆன் அந்த வேதங்களை தற்போதைய வடிவில் சரியானவை என்று ஒப்புக் கொண்டிருக்கும்போது (முந்தைய வேதங்களாகிய) அவற்றுடன் திருக்குர்ஆனுக்கு இருக்கும் முரண்பாடுகள் தவறானவையாக இருக்கும். சர் வில்லியம் முயர் என்பவர் இது பற்றி ஒரு நூலை எழுதியிருக்கிறார். அதில் அவர், திருக்குர்ஆனின் பார்வையில் முந்தைய வேதங்கள் சரியானவையாகும் என்ற முடிவைக் குறிப்பிடுகிறார்.

## முந்தைய வேதங்கள் திருக்குர்ஆனை உண்மைப்படுத்துதல்

6. ஆறாவது கேள்வியாவது, முழு உலகத்திற்குரியதாகவும் இருக்கிறது என்று வாதம் செய்யும் இத்தகைய மகத்தான வேதம் முந்தைய வேதங்களின் மூலமாக உண்மைப்படுத்தப்பட்டிருக்கிறதா? இல்லையா? மேலும் முந்தைய வேதங்களில் (திருக்குர்ஆன் ஆகிய) இது பற்றி செய்தி தெரிவிக்கப்பட்டிருந்தது; இது அதற்கேற்பவே வந்துள்ளது என்று மக்கள் தெரிந்து கொள்ளும் பொருட்டு திருக்குர்ஆனைப் பற்றிய குறிப்பு முந்தைய வேதங்களில் காணப்படுகிறதா?

## முந்தைய வேதங்களை விடத் திருக்குர்ஆனில் இருக்கும் அதிகமான சிறப்புகள்

7. இத்துடனேயே எழுந்து விடுகின்ற ஏழாவது கேள்வி, முந்தைய வேதங்களை விடத் திருக்குர்ஆன் எந்த விஷயங்களை அதிகமாகக் கொண்டு வந்திருக்கிறது? ஒன்று, முன்னர் இருக்கும் எல்லா வேதங்களும் பொய்யானவையாகும். எனவே நான் இறக்கப்பட்டுள்ளேன் என்று அது கூறலாம்; ஆனால் அவையும் உண்மையானவைதான் என்று அது கூறினால், பின்னர் திருக்குர்ஆன் அதிகமான என்ன சிறப்புகளை எடுத்து வைக்கிறது என்று காட்ட வேண்டும். இல்லையென்றால், அது இறங்கியதற்கான தேவை நிரூபணமாகாது. எனவே திருக்குர்ஆன் மற்ற வேதங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிகச் சிறந்தது என்பதை நிரூபித்துக் காட்டுவதும் அவசியமாகும்.

## திருக்குர்ஆனின் சீரமைப்பு

8. இன்னொரு கேள்வியும் எழும். திருக்குர்ஆனில் ஏதாவது சீரமைப்பு கருத்தில் கொள்ளப்பட்டுள்ளதா? அதாவது அதில் ஏதாவது பொருள் அளவிலான சீரமைப்பு இருக்கிறதா? இதில் எந்தச் சீரமைப்பும் இல்லை; முற்றிலும் தொடர்பற்ற கூற்று ஆகும் என்று ஐரோப்பியர்கள் கூறுகின்றனர். மேலும் வினோதமான விஷயம் என்னவெனில், திருக்குர்ஆனில் எந்த சீரமைப்பும் இல்லை என்ற விஷயத்தை முஸ்லிம் ஆலிம்களும் ஒப்புக் கொள்கின்றனர் - நவூதுபில்லாஹ். ஆக, ஒரு வேதம் சீரமைப்பாக இல்லை என்று நிரூபணமாவது அதன் மீதுள்ள மிகக் கடுமையான தாக்குதல் ஆகும். மேலும் இதில் சீரமைப்பு இருக்கிறதென்றால், இந்த சீரமைப்பு எவ்வாறு இறங்கியதோ அவ்வாறு இல்லை என்ற கேள்வி உருவாகிறது. முதலில் இறங்கிய வசனங்கள் பின்னரும், பின்னர் இறங்கிய வசனங்கள் முன்னரும் வைக்கப்பட்டுள்ளன. சூரா அலக் (96-ஆவது அதிகாரம்) முதலில் இறங்கியது; ஆனால்

பின்னால் வைக்கப்பட்டுள்ளது. சூரா ஃபாத்திஹா பின்னர் இறங்கியது; அது முதலில் வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறே மற்ற வசனங்களும் முன் பின் ஆக்கப்பட்டுள்ளன. சில வசனங்கள் மக்காவில் இறங்கின; அவற்றை மதனீ (மதீனாவில் இறங்கிய) சூராக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும் சில மதீனாவில் இறங்கின; அவை மக்கீ (மக்காவில் இறங்கிய) சூராக்களில் எழுதப்பட்டுள்ளன. உண்மையிலேயே திருக்குர்ஆனின் சீரமைப்பு நோக்கமாக இருந்திருக்குமென்றால், இறங்கியதைப் போன்றே ஏன் அது தொகுக்கப்பட்டவில்லை? திருக்குர்ஆனில் இப்போது இருக்கும் வரிசைக்கிரமம்தான் சரியானது என்றால், பின்னர் அதே வாரிசைக்கிரமத்தில் ஏன் இறங்கவில்லை என்ற கேள்வி இப்போது எழுகிறது.

இது ஐரோப்பியர்கள் எழுப்பிய மிக முக்கியமான கேள்வியாகும். புரியும் திறமையுள்ள ஒவ்வொருவரும் புரிந்து கொள்ளும் வகையில் இறைவனின் அருளால் அடிப்படை அளவில் நான் இதற்குத் தீர்வு கொடுத்திருக்கிறேன்.

## நாஸிக் மன்ஸுூக் (ரத்து செய்கின்ற, ரத்து செய்யப்பட்ட வசனங்கள்) பற்றிய விவாதம்

9. திருக்குர்ஆனைப் பற்றி நாஸிக் மன்ஸுூக் (ரத்து செய்கின்ற, ரத்து செய்யப்பட்ட வசனங்கள்) தொடர்பான ஒரு கேள்வி வந்து விடுகிறது. இது முஸ்லிம்களாலேயே உருவாக்கப்பட்டதாகும். ஏனெனில் திருக்குர்ஆனின் சில வசனங்கள் மன்ஸுூக் (ரத்து செய்யப்பட்டவை) ஆகும். அவற்றை மற்ற சில வசனங்கள் அல்லது ஹதீஸுகள் ரத்தாக்கி விட்டன. அவை ஓதப்படும்; ஆயினும் அவற்றின்படி செயல்படுத்தப்பட மாட்டாது என்பது (முஸ்லிம்களாகிய) அவர்களின் கொள்கை ஆகும்.

திருக்குர்ஆனில் தெளிவாக முரண்பாடு காணப்படுவதால்தான் நாஸிக், மன்ஸுூக் என்ற ஏமாற்று வேலை உருவாக்கப்பட்டிருக்கிறது.

அவற்றை நீக்குவதற்கு முஸ்லிம்களுக்கு எந்த வழியும் தென்படாதபோது, முரண்படுகின்ற வசனங்களில் ஒரு வசனத்தை நாஸிக் (ரத்து செய்யக் கூடியது) ஆகவும், இன்னொன்றை மன்ஸூக் (ரத்து செய்யப்பட்டது) ஆகவும் குறிப்பிட்டு விட்டனர் என்று ஐரோப்பியர்கள் இது தொடர்பாகக் கூறியிருக்கின்றனர்.

## திருக்குர்ஆன் இறங்கியதன் நோக்கமும் அது நிறைவேறுவதும்

10. பிறகு, எந்த நோக்கத்திற்காக ஒரு மார்க்க(ச் சட்ட)ம் இறங்குகிறதோ அதை திருக்குர்ஆன் நிறைவேற்றுகிறதா என்ற ஒரு கேள்வியும் எழுகிறது. ஒவ்வொரு இல்ஹாமிய வேதமும், தான் நிறைவேற்ற வேண்டிய குறிக்கோளை நிறைவேற்றும்போதுதான் அது பயனுள்ளதாக இருக்க முடியும். மேலும் மக்கள் எந்த இல்ஹாமிய வேதங்களை நம்புகிறார்களோ, அவற்றின் ஏதாவதொரு தேவையையும் நிரூபிக்கிறார்கள்; இறைவன் புறமிருந்து வேதம் இறங்குவதற்கு இன்னின்ன தேவை இருந்தது என்று கூறுகிறார்கள். இப்போது கேள்வி என்னவெனில், திருக்குர்ஆன் எதற்காக இறங்கியதோ அந்தத் தேவையை அது நிறைவேற்றுகிறதா? அது நிறைவேற்றுகிறதென்றால், அது இறைவனின் வேதம் ஆகும்; இல்லையென்றால், அது இறைவனின் வேதம் அல்ல.

## மனித இயல்புக்கு ஏற்ற போதனை

11. பிறகு திருக்குர்ஆன் எல்லா வகையான, எல்லாப் படித்தரத்தையுடைய இயல்பைக் கொண்ட மக்களுக்காக இருக்கிறது என்பது அதன் வாதமாகும். திருக்குர்ஆனிலிருந்து கல்வியறிவற்ற ஒருவரும் பயன் பெற முடியும்; ஓர் அறிஞர் படித்தாலும் அவரும் பயன் பெற முடியும் என்ற அளவுக்கு உண்மையிலேயே அதன் போதனை இருக்கின்றதா என்ற கேள்வி

உருவாகிறது. இதன் போதனை அப்படி இருக்கிறதென்றால், இந்த வேதம் இறைவனிடமிருந்துள்ளது என்று அழைக்கப்பட முடியும்; இல்லையென்றால் அவ்வாறு அழைக்கப்பட முடியாது.

## திருக்குர்ஆனைப் புரிவதற்கான அடிப்படைக் கொள்கை

12. திருக்குர்ஆனைப் புரிந்து கொள்வதற்கான அடிப்படைக் கொள்கை என்ன என்ற இன்னொரு கேள்வியும் நமக்கு முன்னால் வருகிறது. ஒவ்வொரு வேதத்தைப் புரிவதற்கும், அதிலிருந்து பயன் பெறுவதற்கும் ஏதாவதொரு திறவுகோல் இருக்கிறது. திருக்குர்ஆனைப் புரிவதற்கு எந்த அடிப்படைக் கொள்கைகள் தேவை? ஆக, தஃப்ஸீர்களிலிருந்து (விரிவுரைகளிலிருந்து) பயன் அடைந்தவாறு ஒவ்வொரு மனிதனும் தனது புரிதலுக்கும், தனது அறிவுக்கும் ஏற்ப திருக்குர்ஆனைப் பற்றிய புரிதலைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு, தஃப்ஸீரின் அடிப்படைக் கொள்கையையும் திருக்குர்ஆன் விளக்கிக் கூற வேண்டும்.

## திருக்குர்ஆன் முந்தைய வேதங்களை உண்மைப்படுத்தக் கூடியது என்று எந்தப் பொருளில் கூறப்பட்டுள்ளது?

13. இன்னொரு கேள்வியும் எழுகிறது: அதாவது, திருக்குர்ஆன் முந்தைய வேதங்களை காப்பியடித்துக் கூறியிருப்பதனாலேயே அது முந்தைய வேதங்களை உண்மைப்படுத்தக் கூடியதாக இருக்கிறது என்றும், நகல் செய்த இந்தக் குற்றச்சாட்டிலிருந்து தப்பிப்பதற்காக, திருக்குர்ஆன் அவற்றை உண்மைப்படுத்தக் கூடியதாக இருக்கிறது எனக் கூறப்பட்டிருக்கிறது என்றும் சிலர் கூறுகின்றனர்.

நாம் கூறுகிறோம்: சந்தேகமின்றி, திருக்குர்ஆன் அவற்றை உண்மைப்படுத்துகிறதுதான்; ஆனால், அவற்றிற்கு மாறாகவும்தான் கூறுகிறது! திருக்குர்ஆன் மற்ற வேதங்களிலிருந்து எதை

நகல் செய்திருக்கிறது? எதை விட்டு விடுகிறது? மேலும் எந்த விஷயங்களை நகல் செய்திருக்கிறதோ அதை முந்தைய வேதங்களை விட அதிகமாக எடுத்துரைத்திருக்கிறதா? அல்லது நகல் செய்யும்போது முந்தைய வேதங்களுக்கு மாறுபட்டு கூறியிருக்கிறதா? இப்படிப்பட்ட நிலையில் நாம் திருக்குர்ஆனின் விஷயத்தை சரியானதாக ஏற்றுக் கொள்வதற்கு என்ன காரணம் ஆகியவற்றை நிரூபிப்பது, இப்போது நமக்கு அவசியமாகும்.

## பழைய சம்பவங்களை எடுத்துக் கூறியதன் நோக்கம்

14. பின்னர், திருக்குர்ஆனில் பழைய சம்பவங்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. அவற்றைப் பற்றி அவை ஏன் எடுத்துக் கூறப்பட்டுள்ளன திருக்குர்ஆன் கதைகளின் நூலா என்ன என்ற கேள்வி எழுகிறது. ஏனெனில் ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களின் காலத்திலேயே

إِنْ هَٰذَآ إِلَّآ أَسَٰطِيرُ ٱلْأَوَّلِينَ

(திருக்குர்ஆன் 6:26)

பொருள்: இது முன்னவர்களின் கட்டுக் கதைகளாகும் (என்று நிராகரிப்பாளர்களிடமிருந்து கூறப்பட்டது.)

## ஆணையிடுவதன் உண்மைத்துவம்

15. இந்தக் கேள்வியும் சந்தேகத்தை உருவாக்குகிறது: திருக்குர்ஆனில் ஏன் ஆணையிட்டுக் கூறப்பட்டுள்ளன? ஆணையிட்டுக் கூறுவதனால், முஹம்மது (ஸல்) அவர்கள் கூற்றை உருவாக்கியிருக்கிறார்கள் என்பதல்லவா வெளிப்படுகிறது? மேலும் அவர்கள் அதை இறைவனுடைய கூற்றாகக் குறிப்பிடுவதை மறந்து விட்டார்கள். எனவே ஆணையாக! ஆணையாக! என்று சத்தியமிடத் தொடங்கி விட்டார்கள்.

இந்த வகையான சந்தேகங்களை நீக்குவதற்கு, இறைவனின் கூற்றிலும் ஆணையிடுவது இருக்கின்றன என்பதையும், அதற்கு என்ன காரணம் இருக்கிறது என்பதையும் எடுத்துக் கூறுவது அவசியமாகும்.

## முஃஜிஸாத் (அற்புதங்கள்) பற்றிய விவாதம்

16. அவ்வாறே இப்படியும் கூறப்படுகிறது: அதாவது எந்தவோர் அடையாளத்தைக் காட்டுவதும் ரஸூலின் (இறைதூதரின்) அதிகாரத்திற்குட்பட்டதல்ல; இறைவன் நாடும்போது அடையாளத்தைக் காட்டுகிறான் என்பதில் திருக்குர்ஆன் மீண்டும் மீண்டும் அழுத்தம் கொடுத்திருப்பது உண்மையில் முஹம்மது (ஸல்) அவர்களின் பலவீனத்தை மறைப்பதற்காக ஆகும்.

இது தொடர்பாக திருக்குர்ஆன் முழுவதும் இறையடையாளங்களின் தொகுப்பு ஆகும் என்று நிரூபிப்பது அவசியமாகும்.

## இறைவனின் சொல்லிலும், செயலிலும் எந்த முரண்பாடும் இல்லை

17. அவ்வாறே திருக்குர்ஆனைப் பற்றி, அது அறிவியல் மற்றும் இயற்கை அறிவுக்கு எதிரான விஷயங்களை எடுத்து வைக்கிறது என்றும் கூறப்படுகிறது. இறைவனின் கூற்று அவனுடைய செயலுக்கு மாற்றமானதாக இருக்க முடியாது. எனவே இறைவனின் கூற்று அவனுடைய எந்த செயலுக்கும் மாறானதாக இல்லை. முன்னர் இருந்தவர்களுக்கு தெரியாதிருந்ததும், இயற்கை அறிவுக்கு எதிரானவையாகக் குறிப்பிடப்பட்ட, ஆனால், அவை இப்போது சரியானவை என்று குறிப்பிடப்படுகின்ற அத்தகைய உண்மைகள் இதில் இருக்கின்றன. என்று நிரூபிக்க வேண்டியதும் அவசியமாகும்.

## திருக்குர்ஆனின் ஆன்மிக மேன்மைகள்

18. திருக்குர்ஆனில் என்ன சிறப்புகள் இருக்கின்றன? மேலும் திருக்குர்ஆன் மனித குலத்தை எத்தகைய உயர்ந்த ஆன்மிக அந்தஸ்து வரை கொண்டு செல்வதற்காக வந்துள்ளது என்பதையும் நிரூபிக்க வேண்டியது வரும்.

## இறுதியான ஷரீஅத்தைக் கொண்ட இறைகூற்று

19. திருக்குர்ஆன் இறுதியான ஷரீஅத்தைக் கொண்ட இறைகூற்று என்பதையும் நிரூபிக்க வேண்டியது வரும். இறைவன் புறமிருந்து கூற்று இறங்குவது எப்போதும் நடைமுறையில் இருந்து வந்திருக்கிறது என்று நீங்கள் நம்பும்போது இப்போது ஷரீஅத்தைக் கொண்ட இறைகூற்று வருவது ஏன் நின்று விட்டது என்று மக்கள் கேட்கின்றனர். எனவே, இனி வேறு எந்தவொரு ஷரீஅத்தைக் கொண்ட இறைகூற்றிற்கான தேவையும் இல்லை என்று நிரூபிக்க வேண்டியது அவசியமாகும்.

## அரபி மொழியை மேற்கொண்டதற்கான காரணம்

20. திருகுர்ஆனுக்காக அரபி மொழி ஏன் பயன்படுத்தப்பட்டது? பாரசீகம், சமஸ்கிருதம், அல்லது வேறு ஏதாவது மொழி ஏன் பயன்படுத்தப்படவில்லை என்ற விஷயம் பற்றியும் விவாதம் செய்வது அவசியமாகும்.

## முந்தைய போதனைகளின் குறைபாடுகளுக்கான அடிப்படையான மறுப்பும், சரியான கொள்கைகளை எடுத்துக் கூறுவதும்

21. பிறகு திருக்குர்ஆன் முழு உலகத்திற்காகவும் வந்திருக்கும்போது, அது முந்தைய எல்லா மார்க்க போதனைகளின் பிரதிநிதியாக இருக்கும்போது (எல்லா மார்க்கங்களின்) அந்த போதனைகளில் இருந்த குறைகளை அடிப்படையான முறையில்

திருக்குர்ஆன் நீக்கி விட்டது. மேலும் அவற்றின் இடத்தில் சரியான கொள்கைகளை நிலைநாட்டியிருக்கிறது என்று நிரூபிக்க வேண்டியதும் அவசியமாகும்.

## திருக்குர்ஆனின் உண்மைக்குச் சான்று

22. பிறகு, திருக்குர்ஆன் இறைவனிடமிருந்து இறங்கியதற்கு இன்னின்ன சான்றுகள் உள்ளன என்று அதன் உண்மைக்கான சான்றையும் நிரூபித்துக் காட்ட வேண்டியது வரும்.

## திருக்குர்ஆனின் தாக்கங்கள்

23. திருக்குர்ஆனின் தாக்கங்களைப் பற்றியும் விவாதிக்க வேண்டியது வரும்.

## முதஷாபிஹாத் (ஒப்புமையுள்ள வசனங்கள்) - க்கான தீர்வு

24. முதஷாபிஹாத் (ஒப்புமையுள்ள வசனங்கள்) - க்கு தீர்வு காண்பதும் அவசியமாகும். இதில் சில வசனங்கள் முதஷாபிஹாத் (ஒப்புமையுள்வை) ஆக இருக்கின்றன என்று திருக்குர்ஆன் கூறுகின்றதுதான்; ஆனால் அவை என்னென்ன வசனங்கள் என்று அது கூறுவதில்லை. அந்த வசனங்களைப் பற்றி தெரியாத வரை முழுக் குர்ஆனையும் முதஷாபிஹாத் (ஒப்புமையுள்ளவை) என்று கூற வேண்டியது வரும். இறைவன் எனக்கு இது பற்றியும் எத்தகைய ஞானத்தை வழங்கியிருக்கிறான் என்றால், குறைவிலும் குறைவான அறிவுடையவருக்கும் முதஷாபிஹாத் (ஒப்புமையுள்ள) வசனங்கள் பற்றி அறிந்து கொள்வது கடினமாக இருப்பதில்லை. மேலும் முதஷாபிஹாத் (ஒப்புமையுள்ள) வசனங்கள் திருக்குர்ஆனின் உண்மைக்கு ஓர் அற்புதமான சான்றாகும்.

## சுருக்கெழுத்துகளுக்கான தீர்வு

25. சுருக்கெழுத்துகளைப் பற்றியும், அவற்றின் தேவை என்ன, நோக்கம் என்ன என்பதைப் பற்றி விவாதிப்பதும் அவசியமாகும்.

## ஏழு கிரஅத்துகள் (வாசிக்கும் முறைகள்) என்பதன் கருத்து என்ன?

26. திருக்குர்ஆனுக்கு ஏழு கிரஅத்துகள் (வாசிக்கும் முறைகள்) இருக்கின்றன என்று கூறப்படுகிறதே அதன் கருத்து என்ன? இந்த விவாதமும் அவசியமானதாகும்.

## திருக்குர்ஆன் உருவானது பற்றிய விவகாரம்

27. இறைகூற்றுக்கு இறைவனின் ஞானத்துடன் என்ன தொடர்பு இருக்கிறது? முந்தைய காலத்தில் இது தொடர்பாக மிகப் பெரிய விவாதம் நடைபெற்றுள்ளது. மேலும் திருக்குர்ஆன் உருவான விவகாரம் தொடர்பாக மிகப் பெரிய ஆலிம்களுக்கு அடி விழுந்திருக்கிறது. ஹஸ்ரத் இமாம் அஹ்மது பின் ஹம்பல் (ரஹ்மதுல்லாஹ்) அவர்களை அப்பாஸீ கலீஃபா அடித்து அடித்து எந்த அளவுக்கு நசுக்கி விட்டார்கள் என்றால், அவர்கள் இறந்து விட்டார்கள். சுருக்கமாக, திருக்குர்ஆன் உருவானது தொடர்பாகவும் விவாதம் செய்ய வேண்டியது அவசியமாகும். அதாவது இறைவனின் கூற்றுக்கு இறைவனுடன் என்ன தொடர்பு என்பது பற்றி விவாதம் செய்வதும் அவசியமாகும்.

## திருக்குர்ஆன் ஓர் உயிருள்ள வேதம் ஆகும்

28. திருக்குர்ஆன் ஓர் உயிருள்ள வேதம் ஆகும் என்ற ஒரு விவாதமும் அவசியமானதாகும். ஒரு வேதத்தின் முன்னறிவிப்புகள் நிறைவேறிக் கொண்டிருக்கின்றன என்று எடுத்துக் கூறி விடுவது அது உயிருள்ளதாக இருப்பதற்கு சான்று ஆகாது.

தவ்ராத், இஞ்சீலின் சில முன்னறிவிப்புகளும் இப்போதுவரை நிறைவேறிக் கொண்டிருக்கின்றன. ஆனால் அந்த வேதங்களின் மூலமாக, அவை இறங்கிக் கொண்டிருந்தபோது இருந்த அந்த நோக்கம் நிறைவேறுவதில்லை. ஆனால் திருக்குர்ஆன் எந்த நோக்கத்தைக் கொண்டு வந்ததோ அந்த நோக்கத்தை இன்றும் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

## திருக்குர்ஆன் என்னென்ன ஞானங்களைப் பற்றி எடுத்துக் கூறுகிறது?

29. பிறகு, திருக்குர்ஆன் என்னென்ன ஞானங்களைப் பற்றி குறிப்பிடுகிறது என்பதை எடுத்துக் கூறுவதும் அவசியமாகும். அதாவது மார்க்கத்திற்கு மற்ற வாதங்களுடன் எதுவரை தொடர்பு இருக்கிறது? நல்லொழுக்கம், அரசியல், பண்பாடு முதலியவை மார்க்கத்தில் இணைந்திருக்கின்றவா, இல்லையா?

## திருக்குர்ஆன் பல ஞானங்களைக் கொண்டுள்ளது

30. திருக்குர்ஆன் பல ஞானங்களைக் கொண்டுள்ளது; மேலும் ஒரு வசனத்திற்கு பல பொருள்கள் இருப்பது என்பது அதன் சிறப்பு ஆகும்; குறைபாடு அல்ல என்பது பற்றியும் விவாதிக்க வேண்டியது அவசியமாகும்.

## திருக்குர்ஆன் முழுமையான வேதம் ஆகும்

31. திருக்குர்ஆன் முழுமையான வேதம் என்பது பற்றியும், இனி வானத்தின் வேறு எந்த வேதத்தின் தேவையும் இல்லை; ஆயினும் சுன்னத் (நபியின் நடைமுறை) மற்றும் ஹதீஸின் தேவை இருக்கிறது. மேலும் அதனால் திருக்குர்ஆனின் மேன்மையில் குறைபாடு ஏற்படுவதில்லை என்பது பற்றியும் விவாதிப்பது அவசியமாகும்.

## திருக்குர்ஆனின் கருத்துச் செறிவு

32. திருக்குர்ஆன் கருத்துச் செறிவுள்ளது என்று வாதிக்கிறது. அதன் பொருள் என்ன? மேலும் அது எவ்வகையில் நிகரற்றதாக இருக்கிறது? அதற்கு நிகரானதை வேறு யாரும் ஏன் கொண்டு வர முடியாது?

## திருக்குர்ஆனை மற்ற இல்ஹாமிய வேதங்களுடன் ஒப்பாய்வு செய்தல்

33. திருக்குர்ஆனுக்கும் பிற வேதங்களின் போதனைகளுக்கும் இடையே ஒப்பாய்வு செய்வதும் அவசியமானதாகும்.

## ஒரு நிகரற்ற ஆன்மிக, பௌதிக, நாகரிக, அரசியல் சட்டம்

34. திருக்குர்ஆன் ஒரு நிகரற்ற ஆன்மிக, பௌதிக, நாகரிக, அரசியல் சட்டம் ஆகும் என்பது பற்றியும் ஒட்டுமொத்தமாக விவாதம் செய்ய வேண்டியதும் அவசியமாகும்.

## திருக்குர்ஆனின் உவமைகள்

35. திருக்குர்ஆனில் ஏன் உவமைகள் வந்துள்ளன, அவற்றின் தேவை என்ன என்ற கேள்விக்கும் தீர்வு காண வேண்டியதாக இருக்கிறது.

## திருக்குர்ஆனின் மொழியாக்கங்களின் தேவை

36. திருக்குர்ஆனை மொழியாக்கத்துடன் வெளியிட வேண்டிய அவசியம் என்ன என்பது பற்றியும் (விவாதம் செய்ய வேண்டியது அவசியமாகும்).

## திருக்குர்ஆனைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகள்

37. திருக்குர்ஆனின் பாதுகாப்பு பற்றி செய்யப்பட்ட வாதம் பற்றியும் விவாதிக்க வேண்டியது அவசியமாகும்.

அதாவது இந்த வாதத்திற்காக என்ன வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன?

### திருக்குர்ஆனைக் கவிதை எனக் கூறக் காரணம்

38. திருக்குர்ஆனைப் பற்றி அக்காலத்து மக்கள், இது ஒரு கவிஞரின் கூற்று ஆகும் என்று கூறியிருக்கின்றனர். மேலும் திருக்குர்ஆன் அதை மறுத்துள்ளது. (இது ஒரு கவிஞரின் வசனமன்று என்று கூறுகிறது. 69:42 காண்க). இதன் கருத்து என்ன? அதாவது திருக்குர்ஆன் கவிதை ஆகும் என்பதன் கருத்து என்ன? மேலும் இறைவன் திருக்குர்ஆனைப் பற்றி, இது கவிஞரின் கூற்று அல்ல என்று கூறுகிறானே அதன் பொருள் என்ன?

### திருக்குர்ஆன் படிப்படியாக ஏன் இறங்கியது?

39. திருக்குர்ஆன் துண்டு துண்டாக ஏன் இறங்கியது? ஒரு தடவையிலேயே ஏன் இறங்கவில்லை என்பது பற்றிய விவாதமும் அவசியமானதாகும்.

### திருக்குர்ஆனின் எந்த ஒரு மொழியாக்கமும் அதன் எல்லாக் கருத்துகளையும் உள்ளடக்கியதாக இருக்க முடியாது

40. திருக்குர்ஆனின் எந்த ஒரு மொழியாக்கமும் அதன் எல்லாக் கருத்துகளையும் உள்ளடக்கியதாக இருக்க முடியாது என்பதையும் நிரூபிக்க வேண்டியது அவசியமானதாகும்.

### திருக்குர்ஆனின் எல்லாச் சொற்களும் இல்ஹாமிய சொற்கள் ஆகும்

41. திருக்குர்ஆனின் சொற்கள் இறைவன் இறக்கிய அதே சொற்கள்தானா? அல்லது முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உள்ளத்தில் என்ன சிந்தனை தோன்றியதோ,

அதை அவர்கள் தமது சொற்களில் எழுத வைத்து விட்டார்களா என்பது பற்றியும் விவாதிக்க வேண்டியது அவசியமாகும்.

(முஹம்மது ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உள்ளத்தில் எது தோன்றியதோ, அதை அவர்கள் எழுத வைத்து விட்டார்கள் என்ற இந்த) இரண்டாவது கருத்தை நிரூபிப்பதற்கு ஐரோப்பியர்கள் மிகவும் அழுத்தம் கொடுக்கின்றனர். காரணம் என்னவெனில், இஞ்சீலின் பிரதிகளில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. எனவே சொற்கள் இல்ஹாமியவை அல்ல; மாறாக, கருத்து இல்ஹாமியது என்று அவர்கள் கூறுகின்றனர். மேலும் சொற்களில் ஏதாவது கருத்து வேறுபாடு இருக்கிறதென்றால் எந்தத் தவறும் இல்லை என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

இவ்வாறு ஒரு கதை கூறப்படுகிறது: ஒரு குள்ளநரியின் வால் அறுந்து விட்டது. அது எல்லா குள்ளநரிகளையும் அழைத்து, ஒவ்வொருவரும் தத்தமது வாலை வெட்டி விட வேண்டும் என்றது. மேலும் அது வாலின் பல நஷ்டங்களைப் பற்றி எடுத்துக் கூறியது. பல குள்ளநரிகள் வாலை வெட்டுவதற்கு ஆயத்தமாகி விட்டன. ஆனால் வயது முதிர்ந்த ஒரு குள்ளநரி, முதலில் வாலை வெட்டுவதற்குத் தூண்டும் குள்ளநரி எழுந்து நின்று அதனுடைய வால் இருக்கிறதா இல்லையா எனக் காட்டட்டும்; அதன் வால் முதலிலேயே வெட்டுப்பட்டுள்ளதென்றால், அது அனைவரையும் தன்னைப் போன்று ஆக்க விரும்புகிறது எனத் தெரிந்து விடும் எனக் கூறியது. இதே நிலைதான் இன்று ஐரோப்பியர்களுக்கும் இருக்கிறது. அவர்களின் இஞ்சீல்களில் முரண்பாடுகள் காணப்படுகின்றன. எனவே திருக்குர்ஆனைப் பற்றியும் அதன் சொற்கள் இல்ஹாமியது அல்ல என்று நிரூபிக்க அவர்கள் விரும்புகின்றனர்.

## திருக்குர்ஆன் எல்லா வகையான ஷைத்தானிய கூற்றிலிருந்தும் தூய்மையானதாகும்

42. திருக்குர்ஆனில் ஏதாவது ஷைத்தானிய கூற்றும் இணைய முடியுமா முடியாதா என்பதும் ஒரு முக்கியமான கேள்வியாகும். இந்த கேள்விக்கான மூலதனத்தை முஸ்லிம்களே கொண்டு சேர்த்துள்ளனர். ஏனெனில் ரஸுலே கரீம் (ஸல்) அவர்களின் நாவில் ஷைத்தானின் சில சொற்கள் வெளிவந்து விட்டன என்று அவர்கள் கூறுகின்றனர் - நவூதுபில்லாஹ். அவற்றைப் பற்றி ஜீப்ராயீல் (அலை) அவர்கள், அவை இறைவனிடமிருந்து அல்ல என்று கூறினார்கள். எதிரிகளை மகிழ்விப்பதற்காக பெருமானார் (ஸல்) அவர்கள் சில சொற்களைக் கூறியிருந்தார்கள். ஆனால் பின்னர் அவற்றைப் பற்றி பறிதவித்தவாறு இவை ரத்து செய்யப்பட்டு விட்டன என்று கூறிவிட்டார்கள் என ஐரோப்பியர்கள் கூறுகிறார்கள். இந்த ஆட்சேபனையையும் தவறானது என்று நிரூபிப்பது அவசியமாகும்.

## திருக்குர்ஆன் விளித்துக் கூறியிருக்கும் மக்கள் யார்?

43. திருக்குர்ஆன் விளித்துக் கூறியிருக்கும் மக்கள் யார் என்பதும் ஒரு கேள்வியாகும். அரபு மக்கள் மட்டுமா? அல்லது முழு உலகிலுள்ள மக்களுமா? அல்லது ஆரம்பத்தில் அரபு மக்களை விளித்துக் கூறப்பட்டது. பின்னர் மற்ற மக்களைப் பார்த்து, அல்லது ஆரம்பத்திலிருந்தே அனைவருமே விளித்துக் கூறப்பட்டார்களா?

## திருக்குர்ஆனின் மொழியாக்கம் சொல் அளவில் இருக்க வேண்டுமா? அல்லது மொழிவழக்கின்படி இருக்க வேண்டுமா?

44. திருக்குர்ஆனின் மொழியாக்கம் சொல் அளவில் இருக்க வேண்டுமா? அல்லது மொழிவழக்கின்படி இருக்க

வேண்டுமா என்பதும் ஒரு கேள்வியாகும். பொதுவாக மக்கள் சொற்பொருளை விரும்புகின்றனர். ஆனால் இவ்விதமாக அரபி புரிந்து விடுகிறது; ஆனால் கருத்து புரிவதில்லை. காரணம், சொல்லுக்குக் கீழ் சொல் இருக்கும். அதிலிருந்து மேலேயுள்ள அரபி சொல்லுக்கான பொருள் இது என்பது தெரிந்து விடுகிறதுதான்; ஆனால் முழு சொற்றொடரின் கருத்து புரிவதில்லை. ஏனெனில் இரண்டு மொழிகளின் சொற்களையும் பயன்படுத்தும் விதத்தில் வித்தியாசம் இருக்கிறது. சொற்பொருள் கொடுப்பது எப்படிப்பட்ட விஷயம் என்றால், இன்னாரின் கண் உட்கார்ந்து விட்டது (அதாவது, குருடாகிவிட்டது) என்று உருதுவில் கூறுகிறோம். இதற்கு ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்பவர் 'His eye had sat' என்று மொழியாக்கம் செய்தால் அல்லது அரபியில், **ஜலசத் அய்னுஹூ** என்று மொழியாக்கம் செய்தால், இந்த சொல் மொழியாக்கம் அசல் கருத்தை வெளிப்படுத்தாது என்பது மிகவும் வெளிப்படையானதாகும். ஏனெனில் 'கண் உட்கார்ந்து விட்டது' என்பதற்கு என்ன கருத்து உருதுவில் இருக்கிறதோ அது மற்ற மொழிகளின் சொல் மொழியாக்கத்தில் காணப்படுவதில்லை. மொழியாக்கத்தின் நோக்கம் என்பது கருத்தைப் புரிய வைப்பதாகும். எனவே கருத்து புரியும் வகையில் இருக்க வேண்டும். அதற்காக மொழிவழக்கை மாற்ற வேண்டியது ஏற்பட்டாலும் சரியே!

இந்தக் கேள்விகள் பற்றி திருக்குர்ஆனின் முன்னுரையில் விவாதிக்கப்பட வேண்டிய தேவை இருக்கிறது. அல்லாஹ் நாடினால், இந்த விஷயங்களைக் குறித்து விவாதிக்க நாடியுள்ளேன்.

## திருக்குர்ஆன் மீது ஐரோப்பாவைச் சேர்ந்த கிழக்கத்தியவர்களின் தாக்குதல்

திருக்குர்ஆனுக்கு செய்யும் தொண்டு ஒரு மிகவும் முக்கியமான தொண்டு ஆகும் என்பதைப் பற்றி இப்போது

நான் ஜமாஅத்திற்குக் கூறுகிறேன். இஸ்லாத்திற்கு எதிராக ஐரோப்பிய சமுதாயங்கள் எந்த விஷயத்தின் மீது அதிகமாக அழுத்தம் கொடுத்திருக்கின்றனவோ அது திருக்குர்ஆனின் முக்கியத்துவத்தை வீழ்த்துவதாகும். ஜெர்மனியின் புகழ்பெற்ற எழுத்தாளரும், இஸ்லாத்தின் மிகப் பெரிய எதிரியும், ஐரோப்பாவில் அரபி மொழியில் பெரிய திறமைமிக்கவராக கருதப்படுபவருமாகிய நோல்டேக் (Noldeke) என்பவர் கலைக்களஞ்சியமான என்ஸைக்ளோ பீடியா பிரிட்டானிகாவில் இவ்வாறு எழுதியிருக்கிறார்:

'திருக்குர்ஆனில் தவறுகளையும், குறைகளையும் நிரூபிப்பதற்கு ஐரோப்பிய எழுத்தாளர்கள் மிகவும் அழுத்தம் கொடுத்திருக்கின்றனர். ஆனால், அவர்கள் தமது முயற்சியில் தோல்வி கண்டுள்ளனர்.' (The Encyclopedia Britannica Vol 15 Page 905. Published 1911).

ஆக, ஐரோப்பிய எழுத்தாளர்கள் திருக்குர்ஆனுக்கு எதிராக மிகப் பெரும் அழுத்தம் கொடுத்திருக்கின்றனர் என்று அவரே ஒப்புக்கொள்கிறார்.

ஆனால் அனைத்தையும் விட திருக்குர்ஆனுக்கு எதிரான பயங்கரமான முயற்சியாக ஒரு நூல் இருக்கிறது. அது தற்போது என் கையில் உள்ளது. அதன் பெயர், 'மூன்று பழைய குர்ஆன்களின் பக்கங்கள்' என்பதாகும். முனைவர் பட்டம் பெற்ற ஒரு பெண்மணி அந்த நூலை எழுதியுள்ளார்.

மேலும் அவர் கூறியிருக்கிறார்: "நான் எகிப்து சென்றேன். கிறித்தவர்களின் நூல்களின் காப்பியாக இருக்கும் ஒரு நூலை விலை கொடுத்து வாங்கினேன். அதன் பக்கங்களின் மேல் சில மருந்துகள் பூசப்பட்டபோது கீழேயிருந்து வேறு சில எழுத்துக்கள் வெளிப்பட்டு விட்டன. அதைப் பற்றி டாக்டர்

மிங்கானா என்பவர் இது ஒரு பழைய குர்ஆன் ஆகும் எனக் கூறினார். அதைப் பார்த்தபோது அதிலும், தற்போதைய குர்ஆனிலும் வித்தியாசம் இருக்கிறது என்பது தெரிய வந்தது. இதிலிருந்து குர்ஆன் சீர்குலைந்து விட்டது என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது என்று (டாக்டர் மிங்கானா ஆகிய) அவர் கூறுகிறார்.

அவர் இந்த விஷயத்திற்கான சான்றை எப்படி எடுத்து வைத்திருக்கிறார் என்றால், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் திருக்குர்ஆனை எடுத்து எழுதியபோது மற்ற குர்ஆன்களை எரித்து விட்டார்கள். அவற்றில் எழுதியிருந்ததை எவராலும் எடுத்து எழுத முடியாதிருந்தது. எனவே அந்த நேரத்தில் கிறித்தவர்கள் வெளிப்படையில் தமது மதத்தின் ஒரு நூலை எழுதினர். ஆனால் உண்மையில் எரிக்குமாறு கட்டளையிடப்பட்டிருந்த அந்தக் குர்ஆனையும் அவர்கள் மறைமுகமாக எழுதி விட்டார்கள். இப்போது சில வகை மருந்துகளைப் பூசியதனால் மறைவாக எழுதப்பட்ட குர்ஆன் வெளிப்பட்டு விட்டது."

இது அவர்கள் செய்த மிக பயங்கரமான சூழ்ச்சியாகும். அந்த நூலின் பழைய தாள் காட்டப்படுகிறது; அதன் மீதுள்ள பழைய எழுத்துகள் காட்டப்படுகின்றன. அவற்றின் மூலமாக பல்வேறு வகையான சந்தேகங்கள் உருவாக்கப்படுகின்றன.

## கிறித்தவர்களின் பொய்யான தந்திரங்கள்

இது தொடர்பாக நான் விபரமாக ஆய்வுகளை செய்திருக்கிறேன். அதை இன்று எடுத்து வைக்க விரும்பியிருந்தேன். ஆனால் இப்போது நேரமுமில்லை; சந்தர்ப்பமுமில்லை. ஏனெனில் மேகம் சூழ்ந்துள்ளது. ஆயினும் இது தொடர்பாக ஒரு நகைச்சுவையைக் கூறுகிறேன். அந்த நூலில் பழைய குர்ஆனின் பகுதி எனக் குறிப்பிடப்பட்டு

வெளியிட்டுள்ள அந்த பக்கங்கள் தமது தவற்றை தாமே வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றன. உதாரணமாக, திருக்குர்ஆனில் இவ்வாறு வருகிறது:

فَاٰمِنُوۡا بِاللّٰهِ وَرَسُوۡلِهِ النَّبِىِّ الۡاُمِّىِّ الَّذِىۡ يُؤۡمِنُ بِاللّٰهِ وَ كَلِمٰتِهٖ
وَاتَّبِعُوۡهُ لَعَلَّكُمۡ تَهۡتَدُوۡنَ

(7:159)

பொருள்: எனவே நீங்கள் அல்லாஹ்விடம் நம்பிக்கை கொள்ளுங்கள். மேலும் அல்லாஹ்வின் மீதும் அவனது வசனங்களின் மீதும் நம்பிக்கை கொண்டுள்ள, எழுத்தறிவற்ற நபியாகிய அவனுடைய தூதரின் மீதும் (நம்பிக்கை கொள்ளுங்கள்). மேலும் நீங்கள் நேர்வழி பெறும் பொருட்டு அவரையே பின்பற்றுங்கள்.

ஆனால் கிறித்தவர்களால் எழுதப்பட்ட இந்தக் குர்ஆனில் இவ்வாறு வருகிறது:

فَاٰمِنُوۡا بِاللّٰهِ وَرَسُوۡلِهِ النَّبِىِّ الۡاُمِّىِّ الَّذِىۡ يُؤۡمِنُ بِاللّٰهِ وَ كَلِمٰتِهٖ
وَاتَّبَعَهٗ

அதாவது அவர் அல்லாஹ்வின் மீதும், அவனது கலிமாவின் மீதும் ஈமான் கொள்கின்றார்.

மேலும் '**கலிமா**' என்பதற்கு (கிறித்தவர்களாகிய) அவர்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) எனக் கருத்து கொள்கிறார்கள். அவர்கள் கூற விரும்பும் அதன் கருத்தாவது, ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களைப் பின்பற்றுபவராக இருந்தார்கள்.

இப்படிப்பட்ட சூழ்ச்சிகள் அதில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால் இவ்வகையான முயற்சிகள் செய்தபோதும் இந்த

விஷயங்களே அவர்களைப் பொய்யர்கள் என்று நிரூபித்துக் கொண்டிருக்கின்றன. முதலில், கிறித்தவர்களின் சார்பாக எடுத்து வைக்கப்படும் குர்ஆனின் வரிசைக்கிரமம் தற்போதைய குர்ஆனுக்கு இருக்கும் அதே வரிசைக் கிரமம்தான். எனவே ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் காலத்தில் திருக்குஆனின் வரிசைக்கிரமம் மாறி விட்டது என்று அவர்கள் கூறுவது, அவர்களால் எடுத்து வைக்கப்பட்ட திருக்குர்ஆன் மூலமாகவே தவறானதாகி விட்டது.

பிறகு இந்தக் குர்ஆனில் அரபியே அல்லாத சில சொற்களை எழுதியுள்ளனர். உதாரணமாக, ஓரிடத்தில் இல்ம் என்பதை ஈல்ம் என எழுதியுள்ளனர். அவ்வாறே இன்னோரிடத்தில் எத்தகைய தவறிழைத்திருக்கிறார்கள் என்றால், அதிலிருந்து ஒரு திருடனின் பிரசித்திபெற்ற கதை நினைவுக்கு வந்து விடுகிறது. அது பற்றி இவ்வாறு கூறுகின்றனர்: அவன் புதிதாக திருடனாக ஆகி இருந்தான். திருடிய பிறகு காவல் துறையினர் விசாரிப்பதற்காக வந்தபோது அவனும் அங்கே சென்று விட்டான். மேலும் விசாரனையில் உதவி செய்ய ஆரம்பித்து விட்டான். மேலும் இவ்வாறு கூற ஆரம்பித்தான்: திருடன் இங்கிருந்து வந்ததாகத் தெரிகிறது; இங்கிருந்து இறங்கியிருக்கிறான். பின்னர் அங்கு சென்று விட்டான். அப்போது இந்தத் திருட்டுடன் இவனுக்கு கண்டிப்பாகத் தொடர்பு இருக்கிறது என்பதை காவல் துறையினர் யூகித்து விட்டனர். எனவே அவனிடமிருந்து எல்லா விஷயங்களையும் விசாரிக்க ஆரம்பித்தனர். மேலும் அவன் அழைத்துச் செல்கின்ற இடத்திற்கு அவனுடன் சென்றனர். கடைசியில் அவன் ஒரு கதவருகில் சென்று, திருடன் இந்த வாசல் வழியாக வெளியே சென்றிருக்க வேண்டும் எனத் தெரிகிறது. மேலும் இங்கு அவன் இடரியுள்ளான். அதனால் திருடப்பட்ட

பொருள்கள் உள்ளே; நான் வெளியே என்று கூறினான். இந்த சந்தர்ப்பத்தில் தன்னையுமறியாமல் அவனது வாயிலிருந்து 'நான்' என்ற சொல் வந்து விட்டது. காவல் துறையினர் உடனே அவனைப் பிடித்து விட்டனர். இந்த நிலைதான் (திருக்குர்ஆனில் சொற்களின் தவறுகளைக் கூறுபவர்களுக்கு) இங்கு ஏற்பட்டிருக்கிறது.

وَ اَنْــزَلَ جُنُــوْدًا لَّــمْ تَرَوْهَــا "பொருள்: மேலும் நீங்கள் காணாத படைகளையும் அவன் இறக்கினான்" என்ற ஒரு வசனம் திருக்குர்ஆனில் இருக்கிறது. (9:26). இங்கு ஹா என்ற பிரதிப் பெயர்ச் சொல் 'ஜுனூது' (படைகள்) என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. ஆனால் கிறித்தவர்களால் எடுத்து வைக்கப்பட்ட குர்ஆனில், இங்கு 'جُنْــدًا' என்ற சொல் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் அடுத்து (கிறித்தவர்களால் எடுத்து வைக்கப்பட்ட குர்ஆனில் பெண்பால் சொல் ஆகிய) 'ஹா' என்பதையே வைத்துள்ளார்கள். மேலும் (ஹா என்ற அந்தப்) பிரதிப் பெயர்ச் சொல்லை மாற்றவில்லை.

(குறிப்பு: அதாவது திருக்குர்ஆனில் இருக்கும் 'ஜுனூதுன்' (படைகள்) என்ற பன்மைச் சொல்லுக்கு பிரதிப் பெயர்ச் சொல்லாக 'ஹா' என்று வந்திருக்கிறது; அரபி இலக்கணத்திற்கேற்ப 'ஹா' என்று வருவதுதான் சரியானதாகும். ஆனால் 'ஜுனூதுன்' (படைகள்) என்ற பன்மைச் சொல்லை கிறித்தவர்கள், ஜுன்துன் (படை) என்று ஒருமையில் மாற்றிக் கூறியிருக்கிறார்கள். அப்படி ஒருமையில் வரும்போது அதன் பிரதிப் பெயர்ச் சொல் 'ஹா' என்று வராது; மாறாக, 'ஹு' என்று வர வேண்டும். ஆனால் வசனத்திலுள்ள 'ஜுனூதுன்' (படைகள்) என்ற பன்மைச் சொல்லை, கிறித்தவர்கள் ஜுன்துன் (படை) என்று ஒருமையில் மாற்றி எழுதும்போது அதன் பிரதிப் பெயர்ச் சொல்லாக அரபியில் 'ஹு' என்று

சரியாக எழுதுவதை மறந்து விட்டார்கள். இதிலிருந்து திருக்குர்ஆனுக்கு மாற்றமாக அவர்கள் எழுதியதுதான் தவறு என்பது பகிரங்கமாகி விட்டது. -மொழிபெயர்ப்பாளர்.)

சுருக்கமாக, இந்த வகையான பல சாட்சிகள் இருக்கின்றன. அவற்றின் மூலமாக அதன் உள்ளிருந்தே தவறுகள் தெரிந்து விடுகின்றன. முஸ்லிம்களை ஏமாற்றுவதற்காக எவரோ ஒருவர் அதை எழுதினார் என்றும், அவர் அதில் தவறுகளை செய்துகொண்டே சென்றார் என்றும் தெரிகிறது. அதன்படி வயிதிஸ்தஸ்கா وَاِذِ اسْتَسْقٰى என்பதை (ق Qaf என்பதற்குப் பதிலாக) ك (Kaf) ஐக் கொண்டு எழுதி விட்டார்.

அவ்வாறே هُمُ السُّفَهَآءُ 'ஹுமுஸ் ஸுஃபஹாவு'. என்பதை هُمُسُّفَهَا 'ஹுமுஸ் ஸுஃபஹா' என எழுதி விட்டார். இவ்வாறே இன்னும் பல சொற்களைப் பிழையாக எழுதியிருக்கின்றார். உதாரணமாக, اِنَّمَا النَّسِیْٓءُ என்பதை اِنَّمَا اَلْ نَاسِیْ என்று எழுதப்பட்டுள்ளது. ஆனால் நாஸீ என்பது இந்தப் பொருளில் வருவதே இல்லை. அரபி தெரியாத ஒரு முட்டாள் கிறித்தவர் திருக்குர்ஆனை காப்பியடிக்க உட்கார்ந்து விட்டார் என்பதும், இப்படிப்பட்ட தவறுகளை செய்து கொண்டே சென்றார் என்பதும் இதிலிருந்து தெளிவாகத் தெரிகிறது.

இப்போது நான் திருக்குர்ஆனைப் பற்றி ஐரோப்பிய கிழக்கத்தவர்களின் பல்வேறுபட்ட சில ஆட்சேபனைப் பற்றி குறிப்பிடுகிறேன்.

## சின்னச் சின்ன துண்டுகளான வடிவத்தில் திருக்குர்ஆன் இறங்குதல்

திருக்குர்ஆன் சின்னச் சின்ன துண்டுகளான வடிவத்தில் இறங்கியது எனக் கூறப்படுகிறது. இதிலிருந்து இது இறைவனின் கூற்று அல்ல எனத் தெரிகிறது; துண்டு

துண்டாக இறக்குவதற்கு இறைவனுக்கு என்ன தேவை ஏற்பட்டது? அவனுக்குத்தான் முந்தைய, அடுத்து வருகின்ற அனைத்து நிலைமையும் தெரியுமே? அடியாருக்குத்தான் இனி வரும் நிலைமைகளைப் பற்றித் தெரிவதில்லை. எனவே அவர் இனி வரும் விஷயங்களைப் பற்றி எதுவும் கூற முடியாது. முஹம்மது (ஸல்) அவர்களுக்கு என்ன நிலைமைகள் முன்னால் வந்து கொண்டிருந்தனவோ அவற்றைப் பற்றி திருக்குர்ஆனில் கூறியிருக்கலாமே! எனவே இது அவருடைய கூற்று ஆகும்; இறைவனின் கூற்று அல்ல என்று ஐரோப்பிய கிழக்கத்தியவர்கள் கூறுகின்றனர்.

திருக்குர்ஆனே இந்தக் கேள்வியை எடுத்திருக்கிறது. இறைவன் இவ்வாறு கூறுகிறான்:

وَقَالَ الَّذِيْنَ كَفَرُوْا لَوْلَا نُزِّلَ عَلَيْهِ الْقُرْاٰنُ جُمْلَةً وَّاحِدَةً

(25:33)

அதாவது திருக்குர்ஆன் இந்த ரஸூலின் மீது ஒரு தடவையிலேயே ஏன் இறக்கப்படவில்லை என்று நிராகரிப்பவர்கள் கேட்கின்றனர். .

கிறித்தவர்களுக்கு இப்போது என்ன கேள்வி சிந்தனையில் தோன்றியிருக்கிறதோ, அந்தக் கேள்வியே ரஸூலே கரீம் (ஸல்) அவர்களின் காலத்தில் காஃபிர்களும் கேட்டார்கள் என்பது இதிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. அதாவது ஒரு தடவையிலேயே குர்ஆன் ஏன் இறங்கவில்லை எனக் கேட்டனர். அதற்கு இறைவன் كَذٰلِكَ என்ற பதிலைக் கூறினான். அதாவது எவ்வாறு இறக்கப்பட்டிருக்கிறதோ, அவ்வாறே இறங்க வேண்டியதிருந்தது. لِنُثَبِّتَ بِهٖ فُؤَادَكَ இதில் உள்ள ஞானம் என்னவெனில், நாம் இதன் மூலம் உமது உள்ளத்தை உறுதிப்படுத்த விரும்புகிறோம். (25:33)

ஆக, திருக்குர்ஆன் துண்டு துண்டாக இறங்கியது இறைவனின் பலவீனத்தின் காரணமாக அல்ல; மாறாக, இதன் மூலமாக அவனுடைய உயர்ந்த மகத்துவம் வெளிப்படுகிறது. இப்போது கேள்வி என்னவெனில், திருக்குர்ஆன் படிப்படியாக இறங்குவதால் உள்ளத்தின் உறுதி எவ்வாறு ஏற்படுகிறது? அதைப் பற்றி (இந்த) சில விஷயங்களைக் கூறிவிடுகிறேன்.

1. திருக்குர்ஆன் ஒரேயடியாகவே இறங்கி, அதிலிருந்து சான்றுகளைக் கொடுத்து வந்திருந்தால், ஒரு விஷயம் தொடர்பாக உடனே இறைவனுடைய கூற்று இறங்குவதால் கிடைக்கின்ற அத்தகைய உறுதித்தன்மை உள்ளத்திற்கு கிடைத்திருக்க முடியாது. பாருங்கள். ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் ஏதாவதொரு வேலை செய்து கொண்டிருக்கும்போது அது தொடர்பாக ஏதாவது ஒரு வஹீ இறங்கி, இறைவன் தனது திருப்தியையும், விருப்பத்தையும் வெளிப்படுத்தும்போது என்ன இன்பம் பெருமானார் (ஸல்) அவர்களுக்குக் கிடைத்திருக்குமோ, அப்படிப்பட்ட இன்பம் நாமாக முயற்சித்து புரிந்து கொள்வதால் நமக்கு எங்கிருந்து கிடைக்க முடியும்? அவ்வாறே ஒரு சம்பவம் நிகழும்போது அது தொடர்பாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு இறைவனின் கூற்று இறங்கி விடும். அவ்வாறு இந்தக் கூற்றுக்கு இந்தப் பொருள் ஆகும் என்பது தெரிந்து விடுகிறது. பெருமானார் (ஸல்) அவர்கள் தாமாகப் புரிந்து வசனங்களை ஏதாவதொரு விஷயத்திற்குப் பொருத்தியிருந்தால், (துண்டு துண்டாக இறங்கிய) அந்த நிலையில் வந்திருந்த அந்த இன்பம் கிடைத்திருக்காது.

2. لِنُثَبِّتَ بِهٖ فُؤَادَكَ (பொருள்: நாம் இதன் மூலம் உமது உள்ளத்தை உறுதிப்படுத்த விரும்புகிறோம்) என்பதற்கு திருக்குர்ஆன் எவ்வாறு பொருத்தமாக இருக்கிறதென்றால், எந்த வேதம் முழு உலகத்திற்காகவும் வந்திருக்கிறதோ,

அதை பாதுகாத்து வைப்பதும் அவசியமாக இருந்தது. திருக்குர்ஆன் முழுவதும் ஒரேயடியாக இறங்கியிருந்தால், அதற்காக தமது முழு வாழ்க்கையையும் அர்ப்பணித்தவர் மட்டுமே அதை மனனம் செய்ய முடிந்திருக்கும். ஆனால் படிப்படியாக இறங்கியதால் பலர் அதை மனனம் செய்வதற்கு ஆயத்தமாகி விட்டனர். மேலும் அவர்கள் தமது மற்ற பணிகளை செய்ததுடன் திருக்குர்ஆனையும் மனனம் செய்து கொண்டே சென்றனர்.

இவ்வாறு இந்த வேதம் வீணாகி விடாது; மாறாக, பாதுகாப்பாக இருக்கும் என்பதில் ரஸுலே கரீம் (ஸல்) அவர்களின் உள்ளம் உறுதியாக நிலைபெற்று விட்டது. இதன் காரணமாகவே ரஸுலே கரீம் (ஸல்) அவர்களின் காலத்தில் திருக்குர்ஆனை மனனம் செய்த மக்கள் அதிகமாக இருந்தனர். ஆனால் இப்போது அதை ஒப்பிடுகையில் மிகவும் குறைவாக இருக்கின்றனர். ஏனென்றால், கொஞ்சம் கொஞ்சமாக இறங்கிய காரணத்தால் பலர் உடனுக்குடன் மனனம் செய்து கொண்டே சென்றனர்.

3. (திருக்குர்ஆன்) கொஞ்சம் கொஞ்சமாக இறங்கியதன் மூன்றாவது ஞானம் என்னவெனில், ஒரேயடியாக முழுக்குர்ஆனும் இறங்குவதன் காரணமாக, மக்களின் உள்ளங்களில் அது உறுதியாக நிலை கொண்டிருக்க முடியாது. இப்போது ஓர் இந்து முஸ்லிமாக மாறும்போது அவருக்கு இஸ்லாமிய கட்டளைகளின்படி செயல்படும் முஸ்லிம்கள் தென்படுகின்றனர். எனவே அவர் பதற்றமடைவதில்லை. மேலும் அந்த கட்டளைகளின்படி செயல்படுவதை சுமையாகக் கருதுவதில்லை. ஆனால் நாம் எவருக்காவது ஒரு நூலை எழுதிக் கொடுத்து இதன்படி செயல்படுங்கள் என்று கூறினால், மேலும் எந்த முன்மாதிரியும் இல்லாவிட்டால் மக்கள் நூறு

ஆண்டுகளில் கூட அதன்படி செயல்படுவதற்குக் கற்றுக் கொள்ள முடியாது. எனவே திருக்குர்ஆனின் போதனைகளை உறுதியாக நிலைநாட்டுவதற்காக அதை கொஞ்சம் கொஞ்சமாக இறக்குவது அவசியமாக இருந்தது. ஒரு கட்டளையின்படி செயல்படுவதற்கு மக்கள் கற்றுக் கொண்டு விட்ட பிறகு, இரண்டாவது இறங்குவதும், அடுத்து மூன்றாவது இறங்குவதும் அவசியமாக இருந்தது. இவ்வாறு எல்லா கட்டளைகளின்படியும் செயல்பட வைப்பது கட்டாயமானதாக இருந்தது.

4. திருக்குர்ஆன் ஒரே நேரத்தில் இறங்கியிருந்தால் இப்போது இருக்கும் அதே வரிசைக்கிரமத்தைத்தான் வைத்திருக்க வேண்டியது ஏற்பட்டிருக்கும். ஆனால் எந்த வரிசைக்கிரமத்திற்கேற்ப திருக்குர்ஆன் இறங்கியிருந்ததோ அதை இப்போது வைப்பது நமக்கு அபாயகாரமானதாக இருப்பதைப் போன்றே (தற்போதுள்ள) இந்த வரிசைக்கிரமம், (இறங்கிக் கொண்டிருந்த) அந்த நேரத்தில் வைக்கப்படுவது அபாயகரமானதாக இருந்திருக்கும். தொழுகை, நோன்புகள் ஆகியவற்றைப் பற்றிய கட்டளைகள் துவக்கத்திலேயே இருந்து, நுபுவ்வத் நிரூபணமாகாமல் இருந்திருந்தால் அவை புரியவே முடியாது போயிருக்கும். எனவே முதலில் நுபுவ்வத்தை நிரூபிப்பது அவசியமாக இருந்தது. மேலும் இவர் உண்மையான நபி ஆவார் என்பது நிரூபணமாகும் அளவுக்கு எட்ட வைக்க வேண்டியது அவசியமாக இருந்தது. அதற்குப் பிறகு செயல்படுவதற்காக அழைப்பு கொடுப்பதற்கான நேரமாக இருந்தது. அதற்கு கட்டளைகள் கற்றுக் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இப்போது இது அவசியமில்லை. ரஸூலே கரீம் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொள்ளும் ஒரு ஜமாஅத் இருக்கிறது. இப்போது எவர் இஸ்லாத்தில் இணைகின்றாரோ அவர் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மைத்துவத்தையும் இஸ்லாத்தின் சிறப்புகளையும் அறிந்து

இணைகின்றார். எனவே அவருக்கு திருக்குர்ஆனில் இப்போது இருகிக்கின்ற அதே வரிசைக்கிரமம்தான் தேவைப்படுகிறது. ஆனால் திருக்குர்ஆன் ஒரேயடியாக ஒட்டுமொத்தமாக இறங்கியிருந்தால் இந்த குறைபாடு ஏற்பட்டிருக்கும்.

5. முழு குர்ஆனும் ஒரு தடவையிலேயே இறங்கியிருந்தால் ஒரு பகுதியைப் பற்றி இன்னொரு பகுதியில் சுட்டிக் காட்டியிருக்கவே முடியாது. உதாரணமாக, நாம் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை பகைவர்களின் கூட்டத்திலிருந்து வெளியேற்றி பாதுகாப்பாகக் கொண்டு செல்வோம் என்ற முன்னறிவிப்பு திருக்குர்ஆனில் இருக்கிறது. குர்ஆன் முழுவதும் ஒரே தடவையிலேயே இறங்கியிருந்தால் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மதீனா கொண்டு செல்லப்பட்ட நேரத்தில், பாருங்கள். நாம் அவரை பகைவர்களின் கூட்டத்திலிருந்து காப்பாற்றி கொண்டு வந்து விட்டோம் என்று கூறியிருக்க முடியாது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பாதுகாப்பாக கொண்டு செல்வது பற்றிய முன்னறிவிப்பு இருக்கின்ற முதல் பகுதி இறங்கியிருந்து, பிறகு அந்த முன்னறிவிப்பு நிறைவேறிவிடும்போது அது நிறைவேறுவது தொடர்பான சைகை இருந்த அந்தப் பகுதி அந்த நேரத்தில் இறங்கும் நிலையிலேயே கூறியிருக்க முடியும்.

6. என்னைப் பொருத்தவரை திருக்குர்ஆனைப் பற்றி, வேறொருவர் இதை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார் என்ற ஆட்சேபனை செய்யப்படவிருந்தது என்பது ஒரு முக்கியமான விஷயமாகும். திருக்குர்ஆனில் இந்த ஆட்சேபனை பற்றிய குறிப்பும் வருகிறது. அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்:

وَقَالَ الَّذِيْنَ كَفَرُوْٓا اِنْ هٰذَآ اِلَّآ اِفْكُ ٍۨ افْتَرٰهُ وَاَعَانَهٗ عَلَيْهِ قَوْمٌ اٰخَرُوْنَ

(25:5)

இது அவர் இட்டுக்கட்டிய ஒரு பொய்யே என்றும், இதை

உருவாக்குவதில் இன்னொரு சமுதாயம் அவருக்கு உதவி செய்துள்ளது என்றும் நிராகரிப்போர் கூறுகின்றனர்.

திருக்குர்ஆன் ஒன்று சேர்ந்து கிடைத்திருந்தால், இந்த வேதத்தை யாரோ ஒருவர் உருவாக்கி இவருக்குக் கொடுத்திருக்கிறார் என்று எதிரிகள் கூறியிருப்பார்கள். சில பகுதிகள் மக்காவில் இறங்கின; சில பகுதிகள் மதீனாவில் இறங்கின. எவரோ ஒருவர் உருவாக்கிக் கொடுத்திருந்தார் என்று மக்கத்தினர் கூறினால், பிறகு மதீனாவில் எவர் உருவாக்கிக் கொடுத்திருந்தார்? பிறகு திருக்குர்ஆன் சபையில் இருக்கும்போதும் இறங்கியது. அப்போது யார் அதைக் கற்றுக் கொடுத்திருந்தார்? பிறகு திருக்குர்ஆன் பயணத்திலும் இறங்கியது. (பிறகு போரின்போதும் இறங்கியது.) ஒவ்வொரு போரிலும் கலந்து கொண்ட அத்தகைய எந்த மனிதர் இருந்தார்? எவரும் இல்லை.

சுருக்கமாக, திருக்குர்ஆன் பயணத்திலும், தங்கியிருந்த நேரத்திலும், இரவிலும், பகலிலும், மக்காவிலும், மதீனாவிலும், சபையிலும், தனிமையிலும் இறங்கியது. இவ்வாறு திருக்குர்ஆனை இன்னொரு மனிதர் உருவாக்கி பெருமானார் (ஸல்) அவர்களுக்குக் கொடுத்தார் என்று ஆட்சேபனை செய்பவர்களுக்கு பதில் கிடைத்து விட்டது. அவ்வாறல்லாமல், வேதம் ஒரு சேர இறங்கியிருந்தால், எவரோ ஒருவர் வேதம் உருவாக்கி கொடுத்து சென்று விட்டார்; அது எடுத்துரைக்கப்படுகிறது என்று கூற முடியும். ஆனால் சந்தர்ப்ப, சூழ்நிலைக்கேற்ப வசனங்கள் இறங்கிக் கொண்டிருந்த நிலையில், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எவரேனும் உருவாக்கிக் கொடுத்தார் என்று எவராலும் கூறியிருக்க முடியாது. எனவே குர்ஆன் துண்டு துண்டாக இறங்கியது, لِنُثَبِّتَ بِهٖ فُؤَادَكَ <u>(அதாவது உமது உள்ளத்தை உறுதிப்படுத்துவதற்காக அவ்வாறு</u>

செய்தோம்) என்பதற்கு சான்றாகும்.

## திருக்குர்ஆனைத் தொகுத்தது பற்றிய ஆட்சேபனைகள்

திருக்குர்ஆனைத் தொகுத்தது பற்றி ஓர் ஆட்சேபனை செய்யப்படுகிறது. **திருக்குர்ஆன் தனது அசல் நிலையில் பாதுகாக்கப்பட்டதாக இல்லை என்று கூறுபவர்கள் தமது வாதத்திற்குச் சான்றாக இந்த விஷயங்களைக் கூறுகின்றனர்:**

1. முஹம்மது (ஸல்) அவர்களுக்கு எந்த அளவுக்கு பணிகள் இருந்தனவோ, எந்த அளவுக்கு அவர் போர்களினாலும், குழப்பங்களினாலும் சூழப்பட்டிருந்தார் என்றால், அப்படிப்பட்ட நிலையில் அவருக்கு திருக்குர்ஆன் எவ்வாறு சரியாக நினைவில் இருந்திருக்க முடியும்?

2. அரபிகளின் மனன ஆற்றல் மிகவும் சிறப்பாக இருந்தது என்று கூறப்படுகிறது; ஆனால் இது தவறாகும். சரியான விஷயம் என்னவெனில், அவர்களின் மனன ஆற்றல் நன்றாக இருக்கவில்லை. அது முந்தைய அரபி கவிஞர்களின் கவிதைகளில் இருந்த வேறுபாடுகளிலிருந்தே தெரிய வருகிறது. ஒருவர் ஒருவிதமாக எடுத்துக் கூறுகிறார்; இன்னொருவர் இன்னொரு விதமாக எடுத்துக் கூறுகிறார். இதிலிருந்து அரபியர்களின் மனன ஆற்றல் நன்றாக இருக்கவில்லை என்பது தெரிகிறது. இல்லையென்றால், முரண்பாடுகள் ஏன் இருக்கின்றன?

3. திருக்குர்ஆன் ரஸூலின் காலத்தில் முழுமையாக எழுதப்படவில்லை. முழுமையாக எழுதப்பட்டிருந்தால், திருக்குர்ஆனை மனனம் செய்த ஹாஃபிஸ்மார்கள் கொல்லப்பட்டதனால் திருக்குர்ஆன் வீணாகி விடும் என்ற அபாயம் ஏன் வெளிப்படுத்தப்பட்டது?

4. திருக்குர்ஆனில் இவ்வாறு வருகிறது:

الَّذِيْنَ جَعَلُوا الْقُرْاٰنَ عِضِيْنَ

(15:92)

இவர்கள் குர்ஆனை துண்டு துண்டாக உடைத்தவர்கள் ஆவர்.

ரஸுலே கரீம் (ஸல்) அவர்களின் வாழ்விலேயே திருக்குர்ஆனை துண்டு துண்டாக உடைப்பவர்கள் உருவாகி விட்டிருந்தனர் என்பது இதிலிருந்து தெரிகிறது.

5. ரஸுலே கரீம் (ஸல்) அவர்கள் எழுதப்படிக்கத் தெரிந்தவராக இருக்கவில்லை. எனவே அவர்கள் திருக்குர்ஆனை எழுதுவதற்கு எழுதுபவர்களை வைத்திருந்தார்கள். மேலும் (எழுதுபவர்களாகிய) அவர்கள், தாம் விரும்பியதை எழுதினர்.

6. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் காலத்தில் திருக்குர்ஆனை ஓதுவதில் மிகப் பெரிய கருத்து வேறுபாடு உருவாகி விட்டது என்று எழுதப்பட்டுள்ளது. இதிலிருந்து திருக்குர்ஆனைப் பற்றி முஸ்லிம்களிடம் கருத்து வேறுபாடு இருந்தது என்று தெரிய வருகிறது.

7. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்திலுள்ள குர்ஆனின் எத்தனை பிரதிகள் இருந்தனவோ அவற்றை எரிக்க செய்து விட்டார்கள். இதிலிருந்து ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் எழுத வைத்த அந்தக் குர்ஆனுடன் அவை முரண்பட்டிருந்தன எனத் தெரிகிறது. முரண்பாடு இல்லாதிருந்தால் அவை ஏன் எரிக்கச் செய்யப்பட்டன?

8. திருக்குர்ஆன் அதன் அசலில் இருக்கிறது என்பதற்கு ஸைது மட்டுமே சாட்சியாளர் ஆவார். ஆனால் திருக்குர்ஆனை எழுதுவது அவருடைய கடமையாக இருந்தது. அவர் மீது எவ்வாறு நம்பிக்கை வைக்க முடியும்?

9. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடைய காலத்தின் குர்ஆன் பிரதி சரியானதாக இருந்ததென்றால், பிறகு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் காலத்தில் மீண்டும் எழுத வைக்க வேண்டிய தேவை என்ன இருந்தது? இது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்தின் பிரதிகள் தவறானவை எனக் கருதப்பட்டன என்பதற்கு சான்று ஆகும்.

10. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கலீஃபா ஆனபோது பல குர்ஆன்கள் இருந்தன என்றும், ஆனால் அவர்கள் மரணிக்கும்போது ஒரு குர்ஆனை மட்டுமே அவர்கள் பின்னால் விட்டுச் சென்றார்கள் என்றும் அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது. இதிலிருந்து முரண்பாடுகளையுடைய குர்ஆன்கள் எரிக்கப்பட்டன என்பது தெரிகிறது.

## எதிரிகளின் ஆட்சேபனைகளுக்கான பதில்கள்

இப்போது நான் இந்த ஆட்சேபனைகளுக்கான பதிலைக் கூறுகிறேன்.

ரஸூலே கரீம் (ஸல்) அவர்களுக்கு இத்தனை பணிகளுக்கும், குழப்பங்களுக்கும் மத்தியில் திருக்குர்ஆன் எவ்வாறு நினைவு இருந்திருக்க முடியும் என்று **முதல் ஆட்சேபனை** செய்யப்படுகிறது. இது எப்படிப்பட்ட கேள்வி என்றால், இதற்கு ஒரே பதில்தான் இருக்க முடியும். அது என்னவெனில், ஒரு உண்மை சம்பவத்தை எவ்வாறு பொய்ப்படுத்த முடியும்? சம்பவம் என்னவெனில், திருக்குர்ஆன் அவர்களுக்கு மனனமாக இருந்தது. இரவு பகலாக தொழுகைகளில் ஓதப்பட்டுக் கொண்டிருந்தது. பிறகு, அதை எப்படி மறுக்க முடியும்?

எனக்கு நினைவிருக்கிறது. ஒருமுறை எனக்கு முன்னால் பேராசிரியர் மார்கோலீத் என்பவர், இவ்வளவு பெரிய குர்ஆன்

எப்படி மனனமாக இருந்தது என்று ஆட்சேபனை செய்தார். நான் அவரிடம், முஹம்மது (ஸல்) அவர்கள் மீது குர்ஆன் இறங்கியது. மேலும் முழு உலத்தையும் சீர்திருத்தும் பொறுப்பு அன்னாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் அதை ஏன் நினைவில் வைக்க மாட்டார்கள்? எனது ஒரு மகன் 11 வயதில் முழுக் குர்ஆனையும் மனனம் செய்து விட்டார். திருக்குர்ஆன் முழுவதையும் மனனமாக வைத்திருக்கும் இலட்சக்கணக்கான மனிதர்கள் இருக்கின்றனர். இத்தனை மக்கள் அதை மனனம் செய்ய முடியும்போது எவருக்கு குர்ஆன் இறங்கியதோ அவரால் மட்டும் மனனம் செய்ய முடியாதா என்ன என்று நான் அவரிடம் கூறினேன்.

அரபி மக்களின் மனன ஆற்றல் சிறந்ததாக இருந்ததில்லை; ஏனெனில் அவர்கள் பழைய கவிதைகளில் கருத்து வேறுபாடு கொள்கின்றனர் என்பது **இரண்டாவது ஆட்சேபனை**யாகும். இது தொடர்பாக முதலில் நான் கூறுவதாவது, இது நெருப்புக் கோழியின் உதாரணமாகும். ஒருபுறம், முரண்பாடுகள் இருந்த பழைய கவிதைகள் அரபி மக்களுக்கு நினைவில் இருந்தன என்று கூறப்படுகிறது. மறுபுறம், மார்கோலீத் என்பவர், பழைய காலத்தில் கவிதைகள் இருந்ததேயில்லை; அப்படியே உருவாக்கி முந்தைய மக்களுடன் தொடர்புபடுத்தி கூறப்பட்டு விட்டன என்று கூறுகிறார். ஆக, எந்த கோணத்தில் இஸ்லாம் மீது ஆட்சேபனை செய்ய விரும்பினாரோ அதையே முன்னால் வைத்து விட்டார்.

உண்மையான விஷயம் என்னவென்றால், அரபிகள் எந்த அளவுக்கு மனனம் செய்யும் ஆற்றல் பெற்றவர்களாக இருந்தார்கள் என்றால், புகழ்பெற்ற ஒரு சம்பவம் இருக்கிறது. எந்தக் கவிஞருக்கு ஒரு இலட்சம் கவிதைகள் நினைவில் இல்லையோ அவர் என் அருகில் வர வேண்டாம் என்று ஒரு

மன்னர் அறிவிப்பு செய்தார். அப்போது ஒரு கவிஞர் வந்து, நான் மன்னரை சந்திக்க வந்திருக்கிறேன் என்று கூறினார். அப்போது அவரிடம், மன்னரை சந்திப்பதற்கு ஒரு இலட்சம் கவிதைகள் நினைவில் இருக்க வேண்டியது அவசியம் என்று கூறப்பட்டது. அதற்கு அவர், ஒரு இலட்சம் கவிதைகள் என்பது இஸ்லாமிய காலத்தில் உள்ளவற்றைக் மன்னர் கேட்க விரும்புகிறாரா? அல்லது அறியாமைக் காலத்தில் உள்ள கவிதைகளைக் கேட்க விரும்புகிறாரா? பெண்களின் கவிதைகளைக் கேட்க விரும்புகிறாரா அல்லது ஆண்களின் கவிதைகளைக் கேட்க விரும்புகிறாரா என்று மன்னரிடம் சென்று கேளுங்கள்; நான் எல்லா கவிதைகளையும் கூற ஆயத்தமாக இருக்கிறேன் என்று கூறினார். இதைக் கேட்டு, மன்னர் உடனே வெளியில் வந்து விட்டார். வெளியில் வந்து, நீங்கள் அந்தக் கவிஞரா என்று கேட்டார். அதற்கு ஆம்; நான் அவனேதான் என்று கவிஞர் கூறினார். நீங்கள் என்னிடம் வருவதேயில்லை; ஒருவேளை இந்த அறிவிப்பினால் எழுச்சி ஏற்பட்டு நீங்கள் வந்து விடுவீர்கள் என்று நினைத்தேன். இதற்காகத்தான் நான் இந்த அறிவிப்பை செய்தேன் என்று கூறினார்.

எனவே அரபிகளின் நினைவாற்றல் நன்றாக இருக்கவில்லை என்று கூறுவது தவறாகும்.

அடுத்து கவிதைகளில் முரண்பாடுகள் இருக்கின்றன என்ற விஷயம் எஞ்சியிருக்கிறது. இது தொடர்பாக நினைவில் வைக்க வேண்டிய விஷயம் என்னவெனில், கவிதைகளை மனனம் செய்த மக்கள் அவற்றை இல்ஹாமிய வேதத்தின் கவிதைகளாகக் கருதி, மனனம் செய்யவில்லை. மாறாக, அவற்றின் கருத்துகளை உள்வாங்கிக் கொண்டனர். ஆனால் திருக்குர்ஆனையோ, இறைவனின் கூற்று எனப் புரிந்து

மனனம் செய்து வந்தனர். இதன் காரணமாக, அதன் ஒரு சொல்லைக் கூட முன்னும் பின்னுமாக ஆக்காமல் இருந்தனர். பிறகு மனனம் செய்து வந்த கவிதைகளை ஆசிரியரிடமிருந்து கற்று மனனம் செய்யவில்லை. மாறாக, எவரிடமிருந்து கேட்டார்களோ அதை மனனம் செய்து வந்தனர். மேலும் சரியான சொல்லையே மனனம் செய்ய வைப்பதற்கு ஒவ்வொருவரும் தகுதி படைத்தவராக இருப்பதில்லை. ஆனால் திருக்குர்ஆனை எழுதுவது மற்றும் மனனம் செய்வது குறித்து குறிப்பிட்ட விதிமுறைகள் நியமிக்கப்பட்டிருந்தன என்பதும், திருக்குர்ஆனை மனனம் செய்ய வைப்பதற்காக நான்கு நபர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள் என்பதும் இஸ்லாமிய வரலாற்றிலிருந்து தெரிய வருகிறது. மேலும் அதில் எந்த அளவுக்கு எச்சரிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது என்றால், ஒருமுறை ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், தொழுகையில் ஓதுபவருக்கு எடுத்துக் கொடுத்து விட்டார்கள். அப்போது அவர்கள் தடுக்கப்பட்டார்கள். நீங்கள் இந்த வேலைக்காக நியமிக்கப்படவில்லை என்று கூறப்பட்டது.

சுருக்கமாக, திருக்குர்ஆன் விஷயத்தில் எந்த அளவுக்கு எச்சரிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்ததென்றால், திருக்குர்ஆனை அறிந்தவர்கள் ஆயிரக்கணக்கில் இருந்த போதிலும், நான்கு பேர் இந்தப் பணிக்காக நியமிக்கப்பட்டிருந்தனர். இதற்கு நேர்மாறாக, கவிஞர்களின் சார்பாக கவிதைகளை மனனம் செய்ய வைப்பதற்கு எவர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்? இம்ரவுல் கைஸ் என்ற கவிஞன் தனது கவிதைகளை மக்களுக்கு மனனம் செய்ய வைப்பதற்காக எவரை நியமித்திருந்தான்? ஆனால் திருக்குர்ஆனை மனனம் செய்ய வைப்பது தொடர்பான விஷயத்தில் ஆசிரியருக்குப் பிறகு இன்னொரு ஆசிரியர் என்பது தொடர்ந்து நடைபெற்று வந்திருக்கிறது.

**மூன்றாவது**, ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலத்தில் முழுக் குர்ஆனும் எழுதப்படவில்லை என்று ஓர் ஆட்சேபனை செய்யப்படுகிறது. இதற்கான விடை, இது சரியல்ல என்பதாகும். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் அறிவிப்பு இருப்பதைப் போன்று, ரஸூலே கரீம் (ஸல்) அவர்களின் காலத்தில் நிச்சயமாக முழுக் குர்ஆனும் எழுதப்பட்டது. ஒரு பகுதி இறங்கும்போது ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் எழுதுபவர்களை அழைத்து, இதை இன்ன இடத்தில் சேருங்கள் என்று கூறுவார்கள். இந்த வரலாற்று சான்று இருக்கும்போது திருக்குர்ஆன் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களின் காலத்தில் முழுமையாக எழுதப்படவில்லை என்று கூறுவது அறிவீனம் ஆகும்.

பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்தில் ஏன் எழுதப்பட்டது என்ற கேள்வி எஞ்சியுள்ளது. இதற்கான விடை என்னவெனில், இப்போது திருக்குர்ஆன் ஒரு தொகுப்பாக இருப்பதைப் போன்று ரஸூலே கரீம் (ஸல்) அவர்களின் காலத்தில் ஒரே தொகுப்பாக இருக்கவில்லை. திருக்குர்ஆன் பாதுகாக்கப்பட்டதாக இல்லை என்று மக்கள் கருதிவிடக் கூடாது என்ற சிந்தனை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்குத் தோன்றியது. எனவே அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கூறிய சொற்கள் இவையாகும்: اِنِّىٓ اَرٰى اَنْ تَأْمُرَ جَمْعَ الْقُرْاٰنِ. அதாவது, நான் பொருத்தமானதாகக் கருதுவதென்னவென்றால், திருக்குர்ஆனை ஒரு நூல் வடிவில் தொகுப்பதற்கு தாங்கள் கட்டளையிடலாமே!

தாங்கள் அதனை எழுத வைத்துக் கொள்ளுங்கள் என்று கூறவில்லை. பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்களை அழைத்து திருக்குர்ஆனைத் தொகுப்பீராக என்று கூறினார்கள். اِجْمَعْـهُ

என்று கூறினார்கள். அதாவது இதை ஓரிடத்தில் தொகுத்து விடுங்கள். இதை எழுதிக் கொள்ளுங்கள் என்று கூறவில்லை. சுருக்கமாக, அந்த நேரத்தில் திருக்குர்ஆனின் தாள்களை ஒரு தொகுதியில் ஒன்று சேர்ப்பது பற்றிய விஷயமாக இருந்தது; எழுதுவது தொடர்பான விஷயமல்ல என்பதை சொற்களே தெரிவிக்கின்றன.

**நான்காவது ஆட்சேபனை**, திருக்குர்ஆனில் சில மக்களைப் பற்றி

الَّذِيْنَ جَعَلُوا الْقُرْاٰنَ عِضِيْنَ

(15:92)

பொருள்: அவர்கள் குர்ஆனைப் பகுதிகளாக உடைத்தனர்) என்று வந்துள்ளது. மக்கள் (வெளிப்படையாக) குர்ஆனை துண்டு துண்டாக்குகின்றனர் என்பது இதன் பொருள் அல்ல என்பதை நினைவில் கொள்ள வேண்டும். மாறாக, திருக்குர்ஆனின் சில பகுதிகளின் மீது செயல்படுகின்ற, சிலவற்றின் மீது செயல்படாத மக்கள் மீது அல்லாஹ் தண்டனையை இறக்கியது போன்றே காஃபிர்களின் மீது தண்டனையை இறக்குவான் என்பது இதன் பொருளாகும்.

இங்கு காஃபிர்கள், நயவஞ்சகர்கள் பற்றிய குறிப்பு உள்ளது என்பது இந்த வசனத்திலிருந்து தெளிவாகத் தெரிகிறது. அவர்கள் திருக்குர்ஆனைத் துண்டு துண்டாக்கியிருந்தனர் என்ற பொருள் கொடுக்கப்பட்டாலும், அதுவும் நமக்கு பயனுள்ளதுதான். ஏனெனில் குர்ஆன் அந்த நேரத்தில் தொகுக்கப்பட்டிருந்தது; எனவே பகைவர்கள் அதை துண்டு துண்டாக்கிக் கொண்டிருந்தனர் எனத் தெரிகிறது. முஸ்லிம்களிடம் திருக்குர்ஆன் பாதுகாப்பாக இருந்தது. ஆனால் நயவஞ்சகர்கள் அதைத் துண்டு துண்டாக்கிக் கொண்டிருந்தனர்.

**ஐந்தாவது ஆட்சேபனை**, ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் எழுதப்படிக்கத் தெரியாதவராக இருந்தார்கள். எனவே எழுதுபவர்கள், தாம் விரும்பியதை எழுதி விட்டனர் என்று கூறப்படுகிறது.

இதற்குரிய விடை என்னவெனில், ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் முன்னரே இதற்கான ஏற்பாட்டை செய்திருந்தார்கள். அது என்னவெனில், வஹீ இறங்கும்போது, இதை எழுதிக் கொள்ளுங்கள் என்று எழுதுபவரிடம் கூறுவார்கள்; மேலும் நான்கு பேர்களிடம் இதை மனனம் செய்து கொள்ளுங்கள் என்று கூறுவார்கள். இவ்வாறு எழுதுபவர்களின் தவறை மனனம் செய்தவர்கள் சரிசெய்ய முடிந்திருந்தது. மேலும் மனனம் செய்பவர்களின் தவறை எழுதுபவர்கள் தெரிவிக்க முடிந்திருந்தது. எழுதுபவர் சொல்லை தவறாக எழுதி விட்டார் என்று வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் மனனம் செய்பவர்கள் அந்தத் தவறுடன் எப்படி உடன்பட்டிருக்க முடியும்? இவ்வாறு உடனே தவறு பிடிக்கப்பட முடிந்திருந்தது.

**ஆறாவது ஆட்சேபனை**, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் காலத்தில் திருக்குர்ஆனை ஓதுவதில் மிகவும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது விட்டது என்று கூறப்படுகிறது.

இதற்குரிய விடை என்னவெனில், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் காலத்தில் திருக்குர்ஆனை ஓதுவதில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது விட்டது என்பது சரியான ரிவாயத்திலிருந்து தெரிவதில்லை. மாறாக, கிரஅத்துகளில் (ஓதும் விதத்தில்) கருத்து வேறுபாடு இருந்தது என்று தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது. மேலும் ஏழு கிரஅத்துகளில் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் குர்ஆனை ஓதினார்கள் என்று ஹதீஸுகளிலிருந்து நிரூபணமாகின்றது. ஏனெனில் சில சமுதாயங்களுக்கு சில சொற்களை உச்சரிப்பது கடினமாக இருந்தது. எனவே இந்த சொற்களை இவ்வாறும் ஓதலாம்

என்று ரஸூலே கரீம் (ஸல்) அவர்களுக்கு வஹீ மூலமாக தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக ரிவாயத்தில் வருவதாவது, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் என்னை அழைத்து, பல்வேறு கோத்திரத்தைச் சேர்ந்த மக்கள், எங்களின் கிரஅத் சரியானது என்று கூறுகின்றனர். மேலும் இதனால் வாக்குவாதம் ஏற்படுகிறது. எனவே இதற்குத் தீர்வு ஏற்பட வேண்டும் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், தாங்களே தீர்ப்பு கூறி விடுங்கள் என்று கூறினார்கள். முஸ்லிம்களாகி அனைவரும் ஒன்றாகி விட்டனர்; எனவே ஒரே கிரஅத்துதான் இருக்க வேண்டும்; அது குரைஷிகளின் கிரஅத் ஆகும் என்று ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் தீர்ப்பு கூறினார்கள்.

**ஏழாவது ஆட்சேபனை**, திருக்குர்ஆன் ஓதும் விதத்தில் முரண்பாடு இருக்கவில்லையென்றால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்திலுள்ள குர்ஆன் பிரதிகள் ஏன் எரிக்கப்பட்டன என்பதாகும்.

இதற்குரிய விடை என்னவென்றால், இதுவும் தெள்ளத் தெளிவான தவறானதாகும். அங்கு எழுதியிருப்பது என்னவெனில், ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களிடம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்து குர்ஆன் இருந்தது. அது அவர்களிடமிருந்து கேட்டு வாங்கப்பட்டது. எடுத்து எழுதிய பிறகு திருப்பிக் கொடுத்து விடுங்கள் என்று கூறப்பட்டது. அதன்படி, திருப்பிக் கொடுக்கப்பட்டு விட்டது. மேலும், கிரஅத்துகளின் வேறுபாடு இருக்க வேண்டாம் என்பதற்காக பல்வேறுபட்ட கிரஅத்துகளைக் கொண்ட குர்ஆன்கள் எரிக்கப்பட்டன.

**எட்டாவது ஆட்சேபனை**, திருக்குர்ஆனின் அசல் நிலைக்கு ஸைது மட்டுமே சாட்சியாளர் ஆவர் என்று கூறப்பட்டுள்ளதும்

தவறாகும். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்களுடன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களையும் வைத்தார்கள். மேலும் பள்ளிவாயிலின் கதவருகில் அமர வைத்து விட்டார்கள். மேலும் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களால் எழுத வைக்கப்படாததும், எங்களுக்கு முன்னால் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் எழுத வைத்தார்கள் என்று கூறும் இரண்டு சாட்சியாளர்கள் இல்லாததுமாகிய எந்த எழுத்தும் அவர்களிடம் கொண்டு வரப்பட வேண்டாம் என்று கட்டளையிட்டார்கள்.

**ஒன்பது**, முரண்பாடு இல்லையென்றால், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் காலத்தில் மீண்டும் ஆய்வு செய்ய வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது என்ற ஓர் ஆட்சேபனை செய்யப்படுகிறது.

இதற்கான விடை என்னவெனில், கிரஅத்துகளைப் பற்றி ஆய்வு செய்ய வைக்கப்பட்டது; சொற்றொடர்கள், சூரத்துகள் பற்றி ஆய்வு செய்ய வைக்கப்படவில்லை.

**பத்து**, அவ்வாறே வேறுபாடு இருந்ததில்லை என்றால், ஒன்றைத் தவிர மற்ற நகல்கள் ஏன் எரிக்கப்பட்டன என்று ஆட்சேபனை செய்யப்பட்டிருக்கிறதே இதற்கும் அதே விடைதான். அதாவது, பல்வேறு வகையான கிரஅத்துகளைக் கொண்ட நகல்கள் எரிக்கப்பட்டிருந்தன.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கலீஃபாவான காலத்தில் அதிகமான குர்ஆன்கள் இருந்தன; ஆனால் அவர்களுக்குப் பிறகு ஒன்று மட்டுமே எஞ்சி விட்டது என்று கூறப்படுகிறதே அதற்கான பொருளும், அவர்கள் பல்வேறுபட்ட கிரஅத்துக்ளை எடுத்து விட்டார்கள் என்பதேயாகும். பிறகு எந்த சமுதாயங்களின் கிரஅத்துகள் அழிக்கப்பட்டனவோ அவர்கள் இந்த ஆட்சேபனையை செய்தனர்.

எனவே தற்போதுள்ள குர்ஆன் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களின் காலத்தில் இருந்த அதுவே ஆகும். அதில் எந்த

வேறுபாடும் இல்லை என்ற முடிவு ஏற்பட்டது.

## முஹ்கமாத், முதஷாபிஹாத் (அடிப்படையானவை, உவமை வடிவிலானவை)

இப்போது நான் முதஷாபிஹாத் பற்றி சுருக்கமாகக் கூறுகிறேன். திருக்குர்ஆனில் முஹ்கமாத்தும் இருக்கின்றன; முதஷாபிஹாத்தும் இருக்கின்றன. பிறகு குர்ஆனுக்கு என்ன நம்பகத்தன்மை இருக்கிறது என்று ஆட்சேபனை செய்யப்படுகிறது.

உண்மை விஷயம் என்னவெனில், குர்ஆனின் முதஷாபிஹாத் (உவமை வடிவிலானவை) பற்றி சிந்திக்கப்படவே இல்லை. சூரா ஆல இம்ரானில் அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்:

هُوَ الَّذِیْٓ اَنْزَلَ عَلَيْكَ الْكِتٰبَ مِنْهُ اٰيٰتٌ مُّحْكَمٰتٌ هُنَّ اُمُّ الْكِتٰبِ وَاُخَرُ مُتَشٰبِهٰتٌ

(3:8)

அதாவது, அவனே இந்தக் குர்ஆனைத் தனது தூதர் மீது இறக்கினான். அதில் சில முஹ்கமாத் (உறுதி நிலையானவை) ஆகும்; அவையே இந்நூலின் அடிப்படையாகும். இன்னும் சில முதஷாபிஹாத் (உவமை வடிவிலானவை) ஆகும்.

இதைப் பற்றி மக்கள் இவ்வாறு கூறுகின்றனர்: எந்த வசனம் முஹ்கம் ஆகும்; எந்த வசனம் முதஷாபிஹ் ஆகும் என்று நமக்கு என்ன தெரியும்? இதற்கு நேர்எதிராக ஹூது சூராவில் இவ்வாறு வருகிறது:

كِتٰبٌ اُحْكِمَتْ اٰيٰتُهٗ ثُمَّ فُصِّلَتْ مِنْ لَّدُنْ حَكِيْمٍ خَبِيْرٍ

(11:2)

அதாவது, இது எத்தகைய வேதம் என்றால், இதன்

எல்லா வசனாங்களும் முஹ்கமாத் ஆகும்.

இதிலிருந்து திருக்குர்ஆனின் சில வசனங்கள் முஹ்கமாத் ஆகும்; சில வசனங்கள் முதஷாபிஹாத் ஆகும் என்று முன்னர் கூறிய விஷயம், வெளிப்படையாகப் பார்க்கும்போது தவறானதாகி விட்டது.

மூன்றாவது, ஓரிடத்தில் இவ்வாறு வருகிறது:

اَللّٰهُ نَزَّلَ اَحْسَنَ الْحَدِيْثِ كِتٰبًا مُّتَشَابِهًا مَّثَانِيَ

(39:24)

இறைவனே சிறந்ததிலும் சிறந்த விஷயத்தை, அதாவது, முதஷாபிஹ் (எனும் உயர்ந்த கருத்துகளைக் கொண்ட) வேதத்தை இறக்கினான். இதிலிருந்து திருக்குர்ஆனின் எல்லா வசனங்களுமே முதஷாபிஹ் ஆகும் எனத் தெரிகிறது. ஆனால் முன்னர் எல்லா வசனங்களையும் முஹ்கம் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதிலிருந்து முஹ்கம், முதஷாபிஹ் என்பதன் பொருள் வேறொன்றாகும். அது புரிந்து கொள்ளப்படவில்லை எனத் தெளிவாகத் தெரிந்து விட்டது. மேலும் வினோதமான விஷயம் என்னவெனில், எ(ந்)த (வசனத்தி)ன் மூலமாக சந்தேகங்கள் உருவாகுமோ அது முதஷாபிஹ் என்று பொருள் கொள்ளப்படுகின்றது. ஆனால் திருக்குர்ஆன் முதஷாபிஹ் என்பதற்கு இவ்வாறு விளக்கம் கொடுக்கிறது:

مَثَانِيَ تَقْشَعِرُّ مِنْهُ جُلُوْدُ الَّذِيْنَ يَخْشَوْنَ رَبَّهُمْ ثُمَّ تَلِيْنُ
جُلُوْدُهُمْ وَ قُلُوْبُهُمْ اِلٰى ذِكْرِ اللّٰهِ

(39:24)

இதன் கருத்துகள் மிகவும் உயர்ந்தவையாகும். மேலும்

எவர்கள் இந்த வேதத்தை புரிந்து படிக்கிறார்களோ, தமது இறைவனுக்கு அஞ்சுகிறார்களோ அவர்கள் மெய்சிலிர்த்து விடுகின்றனர். பின்னர் அவர்களின் தோல்களும் உள்ளங்களும் மென்மையடைந்து அல்லாஹ்வை நினைவு கூருவதன் பக்கம் சாய்ந்து விடுகின்றன. அதாவது அவர்களின் உள்ளங்களில் இறைவனின் அன்பின் நீரூற்றுகள் பீரிட்டெழுகின்றன. இப்போது கூறுங்கள். சந்தேகத்திற்குரிய ஏதாவதொரு விஷயத்தினால் இவ்வாறு நடைபெற முடியுமா? முதஷாபிஹ் என்பதற்கு வேறொரு பொருள் என்பது தெளிவாகத் தெரிகிறது. மேலும் அது என்னவெனில், முதஷாபிஹ் என்பதன் பொருள், மற்றவற்றுடன் ஒத்தவையாக இருப்பவை. அதாவது முதஷாபிஹ் என்பது முந்தைய போதனைகளுடன் ஒத்தவையாக இருக்கும் போதனையாகும்.

உதாரணமாக, நோன்பு வைப்பது (என்ற கட்டளை) ஆகும். இந்தக் கட்டளை தனது தன்மையில் முதஷாபிஹ் (ஒத்திருப்பது) ஆகும். ஏனெனில் இந்தப் போதனை முன்னரும் காணப்பட்டிருந்தது. உதாரணமாக, அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்:

كُتِبَ عَلَيْكُمُ الصِّيَامُ كَمَا كُتِبَ عَلَى الَّذِيْنَ مِنْ قَبْلِكُمْ

(2:184)

(பொருள்: உங்களுக்கு முன்னிருந்தவர்களுக்கு நோன்பு கடமையாக்கப்பட்டது போன்று உங்களுக்கும் அது கடமையாக்கப்பட்டுள்ளது.)

எனவே நோன்பு வைப்பது என்ற கட்டளை மட்டும் முதஷாபிஹ் (ஒப்புமையுள்ளது) ஆகும். அவ்வாறே குர்பானிகளைப் பற்றி அல்லாஹ் கூறுகிறான்:

وَلِكُلِّ اُمَّةٍ جَعَلْنَا مَنْسَكًا

(22:35)

அதாவது, நாம் ஒவ்வொரு சமுதாயத்திற்கும் தியாகம் செய்வதற்கான ஒரு வழிமுறையை நியமித்திருக்கிறோம். எனவே குர்பானி பற்றிய கட்டளையும் முதஷாபிஹ் (ஒப்புமையுள்ளது) ஆகும். திருக்குர்ஆன் மற்ற வேதங்களிலிருந்து திருடி எல்லாவற்றையும் எடுத்து வைத்து விட்டது என்று கூறிய மக்களுக்கு உண்மையில் திருக்குர்ஆன் இதில் பதில் கூறியிருக்கிறது. இறைவன் இவ்வாறு கூறுகிறான்:

هُوَ الَّذِیْٓ اَنْزَلَ عَلَیْكَ الْكِتٰبَ مِنْهُ اٰیٰتٌ مُّحْكَمٰتٌ هُنَّ اُمُّ
الْكِتٰبِ وَاُخَرُ مُتَشٰبِهٰتٌ

(3:8)

அதாவது, இந்த வேதம் எப்படிப்பட்டதென்றால், இதில் சில போதனைகள் புதியவையாக இருக்கின்றன. இன்னும் சில போதனைகள் எப்படிப்பட்டவையென்றால், அவை கட்டாயமாக முந்தைய போதனைகளுக்கு ஒத்தவையாக இருக்க வேண்டும்.

உதாரணமாக, உண்மை பேசுங்கள் என்று முந்தைய நபிமார்கள் கூறினர். உண்மை பேசாதீர்கள்; பொய் கூறுங்கள் என்று திருக்குர்ஆன் கூறுகிறதா என்ன? சுருக்கமாக, திருக்குர்ஆனில் சில போதனைகள் முந்தைய போதனைகளுக்கு ஒத்தவையாக இருக்கின்றன என்று கூறுகிறான். ஆனால் அடுத்து கூறுகிறான்:

فَاَمَّا الَّذِیْنَ فِیْ قُلُوْبِهِمْ زَیْغٌ فَیَتَّبِعُوْنَ مَا تَشَابَهَ مِنْهُ ابْتِغَآءَ
الْفِتْنَةِ وَابْتِغَآءَ تَاْوِیْلِهٖ

(3:8)

அறிவீனர்கள் புதிய போதனைகளைப் பார்ப்பதில்லை;

முந்தைய போதனைகளுக்கு ஒத்தவையாக இருக்கும் போதனைகளைப் பார்த்து, திருக்குர்ஆன் இவற்றை காப்பியடித்திருக்கிறது என்று கூறுகின்றனர். அவர்கள் வெறும் குழப்பத்தை உருவாக்குவதன் நோக்கத்திலும், இந்த வேதத்தை அதன் உண்மைத்துவத்திலிருந்து திருப்புவதன் நோக்கத்திலும் அவ்வாறு செய்கின்றனர். وَمَا يَعْلَمُ تَأْوِيلَهُ إِلَّا اللَّهُ ஆனால் அவற்றின் உண்மைத்துவத்தை அல்லாஹ்வே அறிகின்றான். (3:8) மேலும் எத்தனை போதனைகளை மீண்டும் இறக்குவது அவசியமாகும் என்பதை அவனாலேயே புரிய முடியும். இந்த வேலையை அவன் மனிதனின் கையில் கொடுக்கவில்லை. ஏனெனில் அந்த போதனை முன்னர் இறக்கப்பட்டிருக்கும். ஆயினும் அதன் எந்தப் பகுதி இனி வரும் காலத்திற்கு அவசியமாக இருக்கிறது என்பதைப் பற்றி இறைவனே தீர்மானிக்க முடியும். வேறு யாரும் தீர்மானிக்க முடியாது. அல்லது இறைவன் அறிவைக் கொடுத்த பின்னர் இறைவனின் வேதத்தைப் பற்றி எவர்கள் உண்மையான ஞானத்தைக் கொண்டவர்களாக இருக்கிறார்களோ, அவர்களே இந்த போதனையை எந்த அளவுக்கு நிலைபெறச்செய்வது அவசியமாக இருந்தது என்பதையும், வேறொரு கட்டளை ஏன் மாற்றப்பட்டது என்பதையும் புரிய முடியும்.

இதற்கு இன்னும் சரியான விளக்கங்களும் இருக்கலாம். ஆனால் அவற்றில் முஹ்கம் மற்றும் முதஷாபிஹ் நிர்ணயிக்கப்பட முடியாது. ஒரு வசனமே ஒரு நேரத்தில் முஹ்கம் ஆகவும், இன்னொரு நேரத்தில் முதஷாபிஹ் ஆகவும் ஆகி விடுகிறது. அதாவது எந்த வசனம் ஒருவருக்கு புரிந்து விட்டதோ அது முஹ்கம் (வசனமாக) ஆகி விட்டது. எது புரியவில்லையோ அது முதஷாபிஹ் (ஒத்த வடிவிலானது) ஆகி விட்டது. ஆனால் பின்னர் கருத்து வேறுபாடு ஏற்படலாம். ஒருவர் ஒரு பொருளின் அடிப்படையில் ஒரு வசனத்தை முஹ்கம் (அடிப்படையான,

உறுதியான வசனம்) ஆகக் குறிப்பிட்டு விடலாம்; மேலும் இன்னொருவர் அதை சரியானதாக கருதாமல், அதை முதஷாபிஹ் (உவமை விடிவிலான) வசனம் என்று கூறி விடலாம். ஆனால் இந்தப் பொருள்களில் முஹ்கம் (அடிப்படையான, உறுதியான) வசனங்கள் முற்றிலும் வெளிப்பட்டு விடுகின்றன. அதாவது முந்தைய வேதங்களில் உள்ளதை விட அதிகமாக இருக்கும் திருக்குர்ஆனின் போதனைகள் அனைத்தும் முஹ்கம் (வசனங்கள்) ஆகும். மற்றவை முதஷாபிஹ் (உவமை விடிவிலான) வசனங்கள் ஆகும்.

## முழுக் குர்ஆனும் முஹ்கம் என்றும், முழுக் குர்ஆனும் முதஷாபிஹ் என்றும் ஏன் கூறப்பட்டுள்ளது?

பின்னர், ஓரிடத்தில் முழுக் குர்ஆனும் முஹ்கம் என்றும் இன்னோரிடத்தில் முழுக் குர்ஆனும் முதஷாபிஹ் என்றும் ஏன் கூறப்பட்டுள்ளது என்ற கேள்வி எஞ்சியுள்ளது. இது தொடர்பாக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டியது என்னவெனில், நான் கூறியது போன்று, திருக்குர்ஆனின் மரபுச் சொல்லில் எந்த போதனையில் திருக்குர்ஆன் புதுமைப்படுத்தியிருக்கிறதோ அதுவே முஹ்கம் போதனை ஆகும். மேலும் எந்த விஷயத்தில் அது முன்னர் இருக்கும் வேதங்களுக்கு ஒத்ததாக இருக்கின்றதோ அது முதஷாபிஹ் ஆகும். ஆயினும் ஒருவகையில் முழுக் குர்ஆனும் முஹ்கம் ஆகும். ஏனெனில் அடிப்படையாக ஒரு போதனையைப் பார்க்கும்போது, அதன் ஒரு பகுதியைப் பார்ப்பதில்லை; மாறாக, ஒட்டுமொத்த தொகுப்பைப் பார்க்கின்றனர். மேலும் கட்டளைகளின் பல்வேறு வகைகளை ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது இஸ்லாமிய போதனை முற்றிலும் வேறு ஆகும். எந்தப் போதனையின் பகுதியிலும் அது சீர்திருத்தத்தை விட்டு விடவில்லை. மேலும் அது முந்தைய வேதங்களுக்கு முற்றிலும் ஒத்ததாக இல்லை. எனவே (இந்த வகையில்) அவை

அனைத்தும் முஹ்கம் ஆகும். ஆனால் அவ்வாறே முந்தைய வேதங்களில் ஷரீஅத்தின் அனைத்துக் கொள்கைகளும் முந்தைய மக்களின் தகுதிக்கு ஏற்ப இறங்குவதும் அவசியமாக இருந்தது. முந்தைய காலத்து மக்களும் தத்தமது வட்டத்தில் முழுமையைப் பெறுவதற்காக அது அவசியமாக இருந்தது. எனவே திருக்குர்ஆனில் இருக்கின்ற எல்லா வகையான கட்டளைகளும் ஏதாவதொரு விதத்தில் முந்தைய வேதங்களிலும் காணப்படுகின்றன. இந்த வகையில் திருக்குர்ஆன் முழுக்க முழுக்க முதஷாபிஹ் ஆகும்.

தொழுகையும் முந்தைய மார்க்கங்களில் இருக்கின்றது; நோன்பும் இருக்கின்றது; ஹஜ்ஜும் இருக்கின்றது; ஸகாத்தும் இருக்கின்றது. மேலும் இந்த ஒப்புமையைப் பார்த்து சிலர் ஏமாற்றத்திற்குள்ளாகி விடுகின்றனர். பின்னர் திருக்குர்ஆன் இறங்கியதற்கு என்ன பயன் கிடைத்து என்று கருதுகின்றனர். கிறித்தவர்களில் 'யனாபீவுல் இஸ்லாம்' போன்ற நூல்களை இயற்றியவர்கள் இந்த பிரிவைச் சேர்ந்தவர்களாகவே இருக்கின்றார்கள். அவர்கள் திருக்குர்ஆனை மற்ற வேதங்களுடன் ஒப்புமையுள்ளதாக நிரூபித்து திருக்குர்ஆனை பொய் என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால் திருக்குர்ஆன் முன்னரே இந்த ஆட்சேபனையைக் குறிப்பிட்டு அதற்கு மிகவும் தெளிவான விடையைக் கூறி விட்டது.

உண்மை என்னவெனில், வானத்தின் ஒவ்வொரு வேதத்திடமும் கொஞ்சம் முஹ்கமும் இருக்க வேண்டும்; கொஞ்சம் முதஷாபிஹும் இருக்க வேண்டும் என்பது அவசியமாகும் என்ற ஓர் அற்புதமான உண்மையைத் திருக்குர்ஆன் கூறியிருக்கிறது. முதஷாபிஹ் (ஒத்த வசனங்களாக) ஏன் இருக்க வேண்டும் என்றால், எந்த வேதம் முந்தைய வேதங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டு விடுகிறதோ அது இறைவனிடமிருந்துள்ளதாக இருக்க முடியாது. ஏனெனில் அதற்கு முன்னர் எந்த நபரும் இறைவனால் தேர்ந்தெடுக்கப்படவே இல்லை என்று அதற்கு பொருளாகி விடும். மேலும் இறைவன் எவருக்கும் நேர்வழியைக்

காட்டவேயில்லை என்றாகி விடும். இது அபத்தமானதாகும்.

மேலும் முஹ்கம் (புதிய மேன்மையைக் கொண்டதாக) இருக்க வேண்டும் என்பது ஏன் அவசியம் என்றால், அது எந்தவொரு புதிய மேன்மையை உலகத்திற்கு எடுத்து வைக்கவில்லை என்றால், அது வர வேண்டிய தேவை என்ன? முன்னர் இருக்கும் போதனை ஏற்கனவே இருக்கத்தானே செய்தது! மேலும் இந்த அடிப்படைக் கொள்கையின் சிறப்பை யாரால் மறுக்க முடியும்? அல்லது யாரால் இதன் உண்மைத்துவத்தை மறுக்க முடியும்?

திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் முஹ்கம் மற்றும் முதஷாபிஹ் வசனங்களின் விளக்கத்தில் மிகவும் அழுத்தம் கொடுத்திருக்கிறார்கள். ஆயினும் இதன் உண்மைத்தன்மையை புரியாததன் காரணமாக அவர்கள் மிகவும் ஏமாற்றத்திற்குள் ளாகியிருக்கின்றனர்.

இப்போது குளிர் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. மேகமும் சூழ்ந்திருக்கிறது. எனவே இத்துடனேயே நான் எனது சொற்பொழிவை முடித்துக் கொள்கிறேன். மேலும் திருக்குர்ஆனைப் புரிவதற்கும் அதன்படி செயல்படுவதற்கும் உரிய நல்வாய்ப்பை அல்லாஹ் உங்களுக்கு வாங்குவானாக என்று நான் துஆ செய்கிறேன். ஆமீன்.

(இந்த சொற்பொழிவுக்குப் பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் முழு கூட்டத்துடன் சேர்ந்து துஆ செய்தார்கள். பிறகு ஹுஸூர் அவர்களின் உடல்நிலை பலவீனமாக இருந்த போதிலும், மாநாட்டில் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றுவதற்கான, அனைவருடனும் சேர்ந்து துஆ செய்வதற்கான நல்வாய்ப்பை இறைவன் வழங்கியதற்காக அவனுக்கு நன்றி சஜ்தா செய்தார்கள்.

فَالْحَمْدُ لِلّٰهِ عَلٰى ذٰلِكَ